# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] **1943-ம்ஹு ஜூலைமீ 3உ** [ந. 153

**பிரஸங்கம் CLIII.**

## இந்தியா இப்பொழுது முன்னிருந்ததை விட அதிக வலிமையுடனிருக்கிறது.

### பீல்ட் மார்ஷல் வேவல் விடைபெற்றுக்கொள்ளும் காரியக்கிரமத்தில் விடுத்த செய்தி.

மாக்ஷிமைதங்கிய மன்னர்பிரான் இந்தியாவின் ராஜப்பிரதிநிதியும் கவர்னர் ஜெனரலுமான மேன்மை தங்கிய லின்லித்கோ பிரபுவின் உத்தியோக காலம் முடிவடையும் பொழுது அக்டோபர் மாதம் முதல் என்னை அந்த உத்தியோகத்தை வகிக்கும்படி கட்டளையிட்டிருக்கிறார். ஆகையால் இந்தியாவின் சேனாதிபதி உத்தியோகத்திலிருந்து நான் விலகிக்கொள்ளுகிறேன். ஆகிலும் எனக்குக்கிடைத்திருக்கும் அரிய சந்தர்ப்பத்தை அவலம்பித்து இந்தியாவுக்கு என்னால் கூடிய சேவையைச் செய்யமுயலுவேன். நமது மன்னர்பிரானும் இந்திய மக்களும் திருப்தியடையும் படியாக என்னுடைய அலுவல்களை நான் மனப்பூர்வமாக நடத்தவும் முயலுவேன். இந்தியாவிலுள்ள நமது படையைச் சேர்ந்த மூவகைப்பட்டவர்களைப்பற்றிய அக்கரைகள் என்னிடம் எப்பொழுதும் குடிகொண்டிருக்கும். இந்திய மாலுமிகள், இந்தியத் துருப்புகள், இந்திய விமானிகள், இவர்களுடைய சிறந்த வேலைப்பாடையும் குணாதிசயங்களையும் என்னுடைய ராணுவ உத்தியோக காலத்திலும் விசேஷமாக இந்த யுத்தத்தில் மத்தியக் கிழக்கிலும், இந்தியாவிலும் மற்ற இடங்களிலும் என்னுடன் சேர்ந்து யுத்தத்தில் ஈடுபட்டிருந்த பொழுதும் நானறிந்திருக்கிறேன்.

எனக்குப் பதிலாக நியமனம் செய்யப்பட்டிருக்கும் ஜெனரல் ஆசின்லெக் உங்களுக்கு அறிமுகமானவர்தான். அவர் இந்த யுத்தத்தில் பலபோர் முனைகளில் சண்டை போட்டிருக்கிறார். இந்தியச் சேனையின் சேனாதிபதியாகவுமிருந்திருக்கிறார். அவருடைய குணாதிசயங்களாலும் அனுபவத்தினாலும் இந்தியாவின் சேனாதிபதி பதவிக்கு இவர்தான் சிறந்தவர். அவர் மறுபடியும் சேனாதிபதி உத்தியோகம் வகிப்பது உங்களுக்கும், எனக்கும் சந்தோஷமளிக்கிறது.

### இந்தியா அதிக வலுவுள்ளதாகயிருக்கிறது.

நான் உங்களுடைய சேனாதிபதியாகயிருந்த இரண்டு வருஷங்களில், சென்ற 200 வருஷங்களில் இல்லாத வண்ணம் இந்தியாவுக்கு அயல்நாடுகளிலிருந்து மகத்தான அபாயம் உண்டாகிற்று. இந்த பீதி முழுமையும் அகன்றுவிடாதபோதிலும், அது தடைபட்டுவிட்டது. எதிரியின் படையெடுப்பிலிருந்து இந்தியா தப்பித்துவிட்டது.

இந்தியாவின் தீவ்ர முயற்சிகளாலும் யுத்தத்தின் இதர பிராந்தியங்களில் நேசநாடுகளுக்குக் கிடைத்திருக்கும் வெற்றிகளிலிருந்தும் இந்தியா அதிகவலுவடைந்துவிட்டது. மனிதபலமும், ஸப்ளைகளும் நவீன விமானங்கள் கொண்ட படைகளும் ஏராளமாக இந்தியாவுக்கு வந்துவிட்டன. இந்திய ஸமஸ்தான அரசர்களும் நேபாள மகாராஜாவும் தயாரித்து அனுப்பிய படைகளும் சேர்ந்த இந்தியச் சேனையானது நவீன யுத்த முஸ்தீப்புகள் பெற்றும் நவீன யுத்த முறைகளில் பயிற்சிபெற்றும் வலிமை யடைந்துவிட்டது.

இந்தியக் கடற்படையும் இந்திய விமானப்படையும் அதிகரித்துவிட்டன. அவைகள் பிரிடிஷ் கடற்படை, பிரிடிஷ் விமானப்படையுடன் கலந்து நின்று அரிய சேவைகளைச் செய்திருக்கின்றன.

எல்லாவிதமான பொது மக்களின் முயற்சிகளால் பலவகைப்பட்ட ஸ்தாபனங்களிலும் ஏராளமான ஜனங்கள் கலந்துகொண்டதின்மூலம் இந்தியாவில் பெரியபடைகள் அமைந்து விட்டன. இந்தியாவின் யுத்த உற்பத்திகள் அபரிமிதமாக அபிவிருத்தி யடைந்துவிட்டன. இதை வினு, சிலாக்யமான முறையில் நிறுவப்பட்ட பொதுஜன தற்காப்பு ஏற்பாடும் இந்தியாவில் அமைக்கப்பட்டுவிட்டது.

### வெற்றிபெறுவதற்காக.

இந்தியா வலுவுள்ளதாகயிருக்கிறது. நிர்ப்பயமாக மனஉறுதியுடன் எல்லோரும் தங்களுடைய கடமையைச் செய்து வருவார்களேயானுல் இந்தியாவின் க்ஷேமத்துக்கு ஒரு ஹானியும் ஏற்படாது. யுத்தத்தின் வெற்றிகரமான முடிவிற்கும் ஆசியா கண்டத்துக்கு ஜப்பானிடமிருந்து ஏற்பட்டிருக்கும் அபாயத்தை நிவர்த்திப்பதற்கும், நாம் இன்னும் மகத்தான பிரயத்னம் செய்யவேண்டும். நாம் எல்லோரும் ஒன்றுபட்டு உழைத்து இதைச் சாதித்துக்கொள்ளவேண்டும்.

என்னுடைய அமுலுக்குட்பட்டு நீங்கள் செய்த சேவைகளுக்காக உங்களுக்கு என்னுடைய வந்தனம். இனிமேல் நீங்கள் ஈடுபடவேண்டிய வேலைகளிலும் நீங்கள் மேன்மை யடைய வேண்டுமென்று நான் ஆசிகூறுகிறேன்.

தாய்நாட்டை விட்டு வெகு தூரத்தில் இந்தியாவில் சேவை புரிந்துவரும் பிரிடிஷ் துருப்புகளுக்கு ஒரு செய்திவிடுகிறேன். இந்தியாவைப் பாதுகாப்பதிலும் ஜப்பானை முறியடிப்பதற்கான ஏற்பாடுகளிலும் பிரிடிஷ் துருப்புகள் செய்துவரும் முக்கியமான சேவையை பிரிடனிலுள்ள அவர்களுடைய சகோதரர்கள் நன்கு உணர்ந்துவருகிறுர்களென்று நான் உறுதி சொல்லுகிறேன்.

பிரிடிஷாரும், இந்தியர்களும் வெகு நாட்களாகச் செய்துவரும் முயற்சிகளின் பயனுக, சன்மார்க்கத்தில் சண்டைபோடும் சாராருக்கு நிச்சயமாக இறுதியில் வெற்றிகிடைக்குமென்று நம்புகிறேன்.

---

## வார யுத்தச் செய்திகள்.

### 26—6—43-லிருந்து 2—7—43-வரை.

**ஜெர்மனி.**—ரூர் பிரதேசத்தைத் தாக்கும் முறைகள் தீவிரமாக நடைபெற்றுவருகின்றன. ஆகாயத்திலிருந்து எடுக்கப்பட்ட போட்டோ படங்களை நோக்கினுல் தாக்குதல்களினின்றும் ஏராளமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதென்று தெரியவருகிறது. முக்கியமாக டஸ்ஸல்டார்ப், ஹல்ஸ், ஆண்ட்வெர்ப் முதலிய இடங்களிலுள்ள தொழிற்சாலைகள் நாசமாகின. ஜூன் 22-ம் தேதியன்று முல்கீம் என்னும் எஃகு நகரம் தாக்கப்பட்டது. ஜூன் மாதம் 24-ம் தேதி புதிய தந்திரம் கையாளப்பட்டது. அநேக இஞ்ஜின்களுள்ள ராக்ஷஸ விமானங்கள் பிரிடிஷ் விமான தளங்களிலிருந்து புறப்பட்டு, பிரெட்ரிக் ஷேவனிலுள்ள ரேடியோ லொகேட்டர்கள் கருவிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையைத் தாக்கிவிட்டு, தாயகம் திரும்பிவராமல், வட ஆபிரிக்காவுக்குச் சென்று, அங்கே சற்று களைப்பாறிவிட்டு இதாலிக்கு வந்து, ஸ்பீஸியாவைத் தாக்கிவிட்டு, பிறகு பிரிடனுக்குத் திரும்பிவந்தன. 24-ம் தேதியன்று வப்பர்தாலுவின் மேற்கு பாகமான எல்பர் பீல்டும், ஆண்ட்வெர்ப்பும், 25-ம் தேதியன்று போகம்—கெல்ஸன் கெர்சன் பிராந்தியமும், 26-ம் தேதியன்று அப்பவில்லா, பெர்மே, லாட்ரபோர்ட்டும், 28-ம் தேதியன்று கொலோனும் தாக்கப்பட்டன.

**இதாலி.**—இதாலியையும், இதாலியத் தீவுகளையும், நேசதேச விமானங்கள் கடுமையாகத் தாக்கிவருகின்றன. முக்கியமான நகரங்களைவிட்டு ஜனங்கள் வெளியேறிவிடவேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. இவ்வாரத்தில் கீழ்க்கண்ட இடங்கள் தாக்கப்பட்டன. நேபிள்ஸ், கான்ஸெல்லோ, சாலர்மோ, பாட்டிபாகுலா, பெர்ரா அனுன்ஸியாடா, ரெக்கியாடி கலாப்ரியா, மெஸ்ஸினு, கடானியா.

மத்தியக்கிழக்குப் பிரதேசத்திலுள்ள தளங்களிலிருக்கும் வெடி விமானங்கள் மத்திய தரைக் கடலில் 1,100 மைல்கள் கடந்து, ஸ்லோனிகாவுக்குத் தெற்கேயுள்ள ஸெடிஸ் என்னும் விமான தளத்தின் மேல் குண்டுவீசின. ஜூன் 27-ம் தேதியன்று ஆதென்ஸுக்கு சமீபத்திலுள்ள எலூஸிஸ், ஹஸ்ஸானி என்னுமிடங்களிலுள்ள விமானக்கூடங்கள் தாக்கப்பட்டன. 28-ம் தேதியன்று லெக்ஹார்னும், ஸான்கியோவாணியும், ஓலிபாவும், வெனுபியோரிடாவும், ஆல்கெரோ பர்டில்லாவும் தாக்கப்பட்டன.

**ருஷ்யா.**—மத்திய ஜெர்மனியிலும் ருஷ்யாவிலும் உள்ள ஜெர்மன் துருப்புகள் மேற்கு, தெற்கு ஐரோப்பாவில் ஏற்பட்டிருக்கும் படையெடுப்பு பயத்தை நிவர்த்திக்க அவ்விடம்

களுக்குக் கொண்டுபோகப்படுகின்றனவென்பதற்கு அறிகுறிகளிருக்கின்றன என்று டெயிலி எக்ஸ்பிரஸ் பத்திரிகை நிருபர் எழுதுகிருர். இது உண்மையானுல் ஜெர்மானியர்கள் ருஷ்யப் போர் முனையில் யுத்தம் ஆரம்பிப்பது நின்றுவிட்டதென்று சொல்லலாம். இவ்வாரத்தில் ஒரல் பகுதியில் முக்கியமான யுத்தம் நடைபெற்றது. காலினின், கரீலியன் முனைகளிலும், ஸ்மாலென்ஸ்க், ஸெய்வ்ஸ்க், டானெட்ஸ், கூபான் முனைகளிலும் சிறிய சண்டைகள் நடைபெற்றன.

**பஸிபிக் யுத்தம்**.—மே மாதம் முதல் ஜூன் மாதம் 26-ம் தேதி வரையில் 455 ஜப்பானிய விமானங்கள் நஷ்டமாயின; அல்லது பழுதுபட்டன. நமக்கு 17 விமானங்கள் நஷ்டம். சென்ற 8 வாரங்களில் சராசரி ஒரு நாளைக்கு 8 ஜப்பானிய விமானங்கள் நஷ்டமடைந்திருக்கின்றன. ஜூன்மீ 24-ம் தேதி நேசதேச லிபரேட்டர் விமானங்கள் ஒரு ஜப்பானிய சஞ்சாரியையும், சாமான் கப்பலையும், மக்காஸார் ஜலசந்தியில் தாக்கின. அன்று தினமே மூபோ பிரதேசத்தில் ஆருத் தீவிலுள்ள ஜப்பானிய ஸ்தானங்களும், வடக்கு அயர்லாந்திலுள்ள ஸெயிண்டு ஜார்ஜ் முனைக்கு சமீபத்தில் துணைக்காவல்கொண்ட 3 ஜப்பானியக் கப்பல்களும் தாக்குண்டன. ஜூன்மீ 25-ம் தேதியன்று நியூ கினியாவிலுள்ள மாட்டாங்கிலும், ஸாலமன்ஸிலுமுள்ள ஜப்பானியத் தளங்களையும், காஹிலி, பூயின், முண்டா பிரதேசங்களையும், பூகாத் தீவையும் நமது விமானங்கள் தாக்கின. வாரக்கடைசியில் பல்லாலி, விலா, கிஸ்கா, மார்க்கம்—ராமு, காஹிலி, ரிகேடா முதலிய லக்ஷியங்கள் தாக்கப்பட்டன.

தென்மேற்கு பசிபிக்கில் நேசநாடுகள் மகத்தான தாக்குதல் செய்ய ஆரம்பித்துவிட்டார்களென்று தகவல் வந்திருக்கிறது. ஸாலமன்ஸ் தீவுகளிலுள்ள ரெண்டோவாவையும் நியூ ஜார்ஜியாவிலுள்ள விருவையும், நியூ கினியாவின் தென்கரைக்கப்பாலுள்ள டிராபியாண்டி, வுட்லார்க் தீவுகளையும், வடக்குக்கரையிலுள்ள நாஸா விரிகுடாவையும் அமெரிக்கப் படைகள் ஆக்கிரமித்துவிட்டன. நியூ ஜார்ஜியாவிள்ள முண்டா பிரதேசம் வெடி குண்டுகளால் தகர்க்கப்படுகிறது. நியூ கினியாவிலுள்ள ஸலாமுவா பிரதேசத்திலிருக்கும் ஜப்பானியப் படைகளை அமெரிக்க ரோந்துப்படைகள் தாக்கி வருகின்றன.

**சைனு**.—14-வது அமெரிக்க விமானப்படை தெற்கு ஹூபே யுத்த அரங்கத்திலுள்ள அநேக ஜப்பானிய நகரங்களைத் தாக்கியது. யாங்ட்ஸி நதியிலிருந்த ஒரு யுத்தக் கப்பலையும் பழுதாக்கிவிட்டது.

சீனர்கள் கிழக்கு ஹோனுனின் ஜப்பானிய அரணை டிகோவைப் பிடித்துவிட்டார்கள். சூகாங்க், யாங்டிச்லிங் என்னும் இடங்களையும் தாக்கினுர்கள். யாங்ட்ஸி நதியின் தென் கரைக்கு சமீபத்திலுள்ள கங்கெனுக்குக் கிழக்கேயுள்ள டௌ ஹூயிட்டைப் பிடித்து, மிடா ஸோவுக்கும், ஆண்கிகௌவுக்கும் இடையிலுள்ள ஜப்பானிய ஸப்ளை மார்க்கத்தைத் துண்டாடிவிட்டார்கள். யாங்ட்ஸி நதிக்கரையில் ஆன்வெய், ஹூபே, ஹூனன் மாகாணங்களில் ஜப்பானியர்களின் முன்னேற்றத்தையும் துரத்தியடித்துவிட்டார்கள். டங்டிங் ஏரியின் வடமேற்குக் கரையோரமாக சீனர்கள் துரிதமாக முன்னேறிவருகிருர்கள். ஷிகௌ ஸூக்குத் தென்மேற்கில் யாங்ட்ஸி நதிப்பிரதேசத்திலுள்ள முக்கியமான பாலங்களை சீனர்கள் கைப்பற்றிக்கொண்டார்கள். ஹூவாயங் என்னும் நகரத்தை அவர்கள் பலமாகத் தாக்கிவருகிருர்கள்.

யாங்ட்ஸி நதிப்பிரதேசத்தில் மற்ரெரு முறை தாக்குவதற்காக ஜப்பானியர்கள் நாங்கிங்கிலிருக்கும் துருப்புகளை ஹிங்கௌ பிரதேசத்துத்துக்குக் கொண்டுபோகிருர்கள்.

**பர்மா**.—சின் மலைகளின் நிலைமை அமைதியாகயிருக்கிறது. நடைபெற்ற மூன்று சண்டைகளில் எதிரிக்கு ஆள் சேதம் ஏற்பட்டது. காபா பள்ளத்தாக்கில் வெற்றிகரமாக ஒரு தாக்குதல் செய்யப்பட்டது. கால்மியோ பிரதேசத்திலும் பலமான தாக்குதல் செய்யப்பட்டன. மாண்டலேயிலுள்ள இருப்புப்பாதை நிலயங்களும், கான்பியூவிலுள்ள ரயில்வே கெட்டகைகளும், டின்டீன்வானிலுள்ள ரயில் வண்டிகளும், ஷ்வேலி பாலமும், கினுவாவிலுள்ள இருப்புப்பாதை ஸ்தாபனங்களும் இந்த வார ஆரம்பத்தில் வெடி விமானங்களால் தாக்கப்பட்டன. ஜூன் மாதம் 25-ம் தேதியன்றுதான் பியூஸயாவிலுள்ள ஒரு ரயில் வண்டித் தொடரும், மனிவாவிலுள்ள கட்டடங்களும், யுவாடங்கிலுள்ள இருப்புப்பாதை ஸ்தாபனங்களும் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன. ஜூன்மீ 27-ம் தேதியன்று அக்யாப் தீவு தாக்கப்பட்டது. ஜூன்மீ 27-ம் தேதியன்று மீஞ்சானிலுள்ள பஞ்சு நெசவு தொழிற்சாலைகளும், ஸெடாவிலுள்ள ரயில்வே ஸ்டேஷனும், மணிவாவிலுள்ள இருப்புப்பதை ஸ்தாபனங்களும், தான்பியூ ஸ்யாத்திலுள்ள தண்டவாளங்கள் உற்பத்தி செய்யும் தளமும், டயமண்ட் தீவும், பயின்மானு, ஸாகெங்கிலுள்ள இருப்புப்பாதைத் தளங்களும் மெய்கிலாவிலுள்ள ராணுவ ஸ்தலமும் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன. ஜூன்மீ 28-ம் தேதியன்று அக்யாப்பும், மியோபாங்கும் தாக்கப்பட்டன. 50 சிறிய கலங்கள் பழுதாக்கப்பட்டன.

# சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**21—6—43.** (திங்கட்கிழமை).

**ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—(2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
கப்பல்கள்.—டெக்ஸல் (Texel).
ரயில்வே இஞ்ஜின்கள்.—வடக்கு பிரான்ஸ் (Northern France).
இரவு.—(44 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
தொழிற்சாலைப் பட்டணம்.—ஜெர்மனியிலுள்ள க்ரெபெல்ட் (Kerefeld).
ரயில்வே இலக்குகள்.—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).
எதிரி விமான நிலயங்கள்.—பாய் (Poix).

**இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

ரயில்வே தளங்கள்.—ரெஜியோ டி கலாப்ரியா (Reggio Di Calabria), சான்கியோவன்னி (Sangiovanni).
ரஸ்தாப் போக்குவரத்துகள்.—சிஸிலி (Sicily).
ரயில் போக்குவரத்துகள்.—தெற்கு இதாலி (South Italy).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
எதிரி விமான நிலயங்கள்.—விரகு குவியல்கள் ஆக்கிரமிக்கப்பட்ட ருஷ்யாவில்.

**தூரக்கிழக்கு (Far East).**

எதிரி விமான நிலயங்கள், ராணுவ நிலயங்கள்.—கொபாங் (Koepang).
ஜப்பானியப் படகுகள்.—நியூ பிரிடனிலுள்ள ரகுனென் முனை (Regunen point).
நியூ கினியிலுள்ள ஸலாமூவா (Salamaua) பிரதேசம்.
ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda).
இஞ்சின் ஷெட்டுகள்.—பர்மாவிலுள்ள தாழி (Thazi).
ரயில்வே ஜங்ஷன்.—பர்மாவிலுள்ள மியாங்யான் (Myingyan).

**22—6—43.** (செவ்வாய்க்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

பகல்.—தொடர்ச்சியான ரப்பர் தொழிற்சாலை—ஹல்ஸ் (Huls).
பெரிய மோட்டார் கிட்டங்கிகள்.—ஆன்ட்வெர்ப் (Antwerp)பிற்கருகில்.
கப்பல் தளங்கள்.—ராட்டர்டாம் (Rotter dam).
இரவு.—நூர் எஃகு தொழிற்சாலை பட்டணம்—ஜெர்மனியிலுள்ள மல்ஹீம் (Mulheim).

**இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

யுத்த தளவாடங்கள் சேகரிக்குமிடம்.—இதாலியிலுள்ள ஸாலர்னோ (Salerno).
அச்சுநாட்டுக் கப்பல்கள்.—ஏஜியன் கடல் (Aegean sea).
இலக்குகள்.—சிஸிலி (Sicily)
கப்பற்கட்டுந் துறைகள்.—ஸார்டீனியாவில் உள்ள ஆல்பியா (Olbia).
விமான நிலயம்.—சிஸிலியிலுள்ள கோமிஸோ (Comiso).

**ருஷ்யா (Russia).**

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
எதிரி விமான நிலயங்கள், ரயில்வே ஜங்ஷன்கள்.—ஸ்கோப் (Pscov).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியச்சைனியங்கள்.—பொகெய்ன்வில்லி தீவிலுள்ள கியட்டா (Kieta), பூடான் பிரதேசத்திலுள்ள காஹிலி (Kahili).
ஜப்பானிய கடல் விமான தளம்.—ஆரோத் தீவிலுள்ள டாபர்பேன் (Taberfane).
ஜப்பானியச் சைனியங்கள்.—மூபோ (Mubo) பிரதேசம்.
எதிரி ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள முனிவா (Monywa).

**23—6—43.** (புதன்கிழமை).

**ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).**

இரவு.—சுரங்கவெடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

**இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).**

இதாலி கடற்படை தளம்.—இதாலியிலுள்ள ஸ்பெஸியா (Spezia).
எதிரி படகுகள்.—சிஸிலி கடற்கரைகளில்.
ரயில்வேக்கள்.—பொஸ்ஸல்லோ (Pozzallo).
சைனியம், யுத்த தளவாடம் முதலியவைச் சேகரிக்குமிடங்கள்.—சிஸிலியிலுள்ள கடானியா (Catania).
ரயில் ரோட் ஜங்ஷன்கள்.—ஸார்டீனியாவில் உள்ள சிலிவானி (Chilivani).
விமான நிலயம்.—ஸார்டீனியாவிலுள்ள வெனபுலோரிடா (Venaflorita).
கப்பல்கள்.—அரான்சி (Aranci).
விமானமிறங்குமிடங்கள்.—ஸார்டீனியாவில் உள்ள கெபோடெர்ரா (Capoterra).

**ருஷ்யா (Russia).**

விமானச்சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
ரயில்கள்.—ஆர்ஷா (Orsha).
யுத்த தளவாடக் குவியல்கள்.—கராச்சேவ் (Karachev).

### தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய க்ருயிஸர், வியாபாரக் கப்பல்கள்.— *மகாஸர்* (Macassar) *ஜலசந்தி.*

பட்டணங்கள், கப்பற்கட்டும் துறைகள், கப்பல்கள்.—*மகாஸர்* (Macassar).

ஜப்பானியரிடமுள்ள பட்டணங்கள்.—*சீனுவிலுள்ள தெற்கு ஹுபே* (Hupeh) *பிரதேசம்.*

ரயில்ரோட் தளங்கள்.—*பர்மாவிலுள்ள மாண்டலே* (Mandalay).

ரயில்ரோட் ஷெட்டுகள்.—*பர்மாவிலுள்ள கான்பியூ* (Kanbyu).

ரயில்வேப் பாதைகள்.—*பர்மாவிலுள்ள டின்டெயின்வான்* (Tindeinvan).

ரயில்ரோட் ஸ்தாபனங்கள்.—*பர்மாவிலுள்ள கினு* (Kinu).

**24—6—43.** (வியாழக்கிழமை).

### ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—எண்ணெய்க் கிணறுகள், கப்பற் கட்டுந் துறைகள்—*பெல்ஜியத்திலுள்ள பிளஷிங்* (Flushing).

விமான நிலயம்.—*பிரான்ஸிலுள்ள செர்பர்க்* (Cherbourg).

யுத்த தளவாடம் சேர்ப்பிடங்கள்.—*செயின்ட் ஓமர்* (St. Omer.)

விமான நிலயங்கள்.—*போர்ட் ரோக்* (Fort Rouge), *அப்பிவில்லி* (Abbeville).

விமானத் தாக்குதல்கள்.—*பெல்ஜியம்* (Belgium), *ஹாலந்து* (Holland).

இரவு.—ஜெர்மன் தொழிற்சாலை பிரதேசங்கள்.—*ரூரிலுள்ள எல்பர்பெல்டு* (El (Berfeld).

### இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான நிலயம்.—*கிரீஸிலுள்ள ஸேடிஸ்* (Sedes).

ரயில்வே ஜங்ஷன்.—*ஸார்டீனியாவிலுள்ள சிலிவானி* (Chilivani).

துறைமுகம்.—*ஸார்டீனியாவிலுள்ள ஆல்பியா* (Olbia).

விமான நிலங்கள்.—*ஸார்டீனியா* (Sardinia).

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

### தூரக்கிழக்கு (Far East).

ஸப்ளை, விரது துவியல்கள்.—*நியூ கினியிலுள்ள ஸலாமூவா* (Salamaua).

ஜப்பானியச் சைனியங்கள்.—*மூபோ*(Mubo) *பிரதேசம், நியூகினியிலுள்ள வூடு*(Woodu) *தீவு.*

ஜப்பானியப் படகு.—*வான்குனு* (Vangunu) *தீவு.*

*அலூஷியனிலுள்ள* கிஸ்கா.—*பர்மாவிலுள்ள டயமண்ட் தீவு.*

**25—6—43.** (வெள்ளிக்கிழமை).

### ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—இலக்குகள்— *வடமேற்கு ஜெர்மனி (18 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை.)*

விமான நிலயம்.—*பிரான்ஸிலுள்ள கேயன்* (Caen).

இரவு.—ஜெர்மனியின் பெரிய நிலக்கரி ஸ்தலம்.—*ரூரிலுள்ள போக்கம்*(Bochum).

### இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரயில்வே தளங்கள், கப்பற்கட்டும் துறைகள்.— *ஸிஸிலியிலுள்ள மெஸ்ஸினு.* (Messina). ரேகியோ டி கலாபிரியா(ReggioDiCalabria)

கப்பற் கட்டுந்துறைகள்.—*ஸார்டீனியாவிலுள்ள ஆல்பியா* (Olbia).

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—*ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.*

ரயில்வே ஜங்ஷன்கள்.—*ஆக்கிரமிக்கப்பட்ட ருஷ்யாவிலுள்ள பிரையான்ஸ்க்*(Bryansk).

ரயில்வே ஸ்டேஷன்.—*ஆக்கிரமிக்கப்பட்ட ருஷ்யாவிலுள்ள நாவல்யா* (Navlya).

### தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியரால் கைக்கொள்ளப்பட்ட கிராமங்கள்.—*நியூ கினியாவிலுள்ள மடாங்* (Madang) *பிரதேசம்.*

ஜப்பானிய வியாபாரக் கப்பல்கள்.—*நியூ அயர்லாந்து* (New Ireland).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—*ஸாலமன்ஸிலுள்ள புகா* (Buka), *காஹிலி* (Kahili), *முண்டா வளைகுடா* (Munda Bay) *பிரதேசம்.*

*அலூஷியனிலுள்ள* கிஸ்கா (Kiska).

எதிரி சைனிய நிலயங்கள்.—*பர்மாவிலுள்ள தான்பியுஷாயா* (Thanbyuzaya).

ரேடியோ ஸ்தாபனங்கள்.—*நியூ ரங்கூனிலுள்ள டயமண்ட்* (Diamond) *தீவு.*

கட்டடங்கள்.—*பர்மாவிலுள்ள முனிவா* (Monywa), *மாண்டலே மலைத்தொடர்ச்சி* (Mandalay Ghats).

ரயில்வே ஸ்தாபனங்கள்.—*பர்மாவிலுள்ள யுவாடங்* (Yuataung).

**26—6—43.** (சனிக்கிழமை).

### ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயம்—வடக்கு பிரான்ஸ் (Northern France).

சேனை, யுத்த தளவாடங்கள் சேகரிக்குமிடங்கள்.—*லெ ட்ரெபோர்ட்* (Le Treport).

விமான நிலயம்.—*பிரான்ஸிலுள்ள அப்பிவில்லி* (Abbeville).

இரவு.—சுரங்கவெடி பாவுதல்—எதிரி ஜலப் *பிராந்தியங்களில்.*

விமான நிலயம்.—வடக்கு *பிரான்ஸ்* (Northern France).

### இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

வேவு பார்த்தல்.—ஸிஸிலி (Sicily), ஸார்டீனியா (Sardinia)—(2 அச்சுநாட்டு விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

கப்பற்கட்டும் துறைகள், சேனைகள் தயார் செய்யுமிடங்கள்.—இதாலியிலுள்ள நேபிள்ஸ் (Neples).

### ருஷ்யா (Russia).

(19—6—43உ முதல் 26—6—43உயோடு முதல் வாரத்தில் ருஷ்ய விமான நஷ்டம் 74 ; எதிரி விமான நஷ்டம் 211).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ரயில்வே ஜங்ஷன்—ஓரல் (Orel).

அச்சு விமான நிலயங்கள்.—ஓரல் (Orel).

### தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியச் சைனியங்கள்.-ஷார்ட்லண்ட்ஸிலுள்ள பல்லாலி (Ballale), போபோராங் (Poporang).

நியூஜார்ஜிய தீவிலுள்ள முண்டா (Munda).

கொலம்பங்காராத் தீவிலுள்ள விலா (Vila).

அலூஷியன் தீவிலுள்ள கிஸ்கா (Kiska).

கிராமங்கள்.—அக்யாப் (Akyab)பிரதேசம்.

டயமண்ட் (Diamand) தீவு.

பர்மாவிலுள்ள் மோல்மீன் (Moulmin).

**27—6—43.** (ஞாயிற்றுக்கிழமை).

### ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—எதிரி கப்பல்கள்-டச்சுக் கடற்கரை.

விமானத் தாக்குதல்கள்.—வடக்கு பிரான்ஸ் (Northern France).

விமான நிலயம்.—பிரான்ஸிலுள்ள பாரிஸ் (Paris).

ரயில்வே இலக்குகள்.—ஹாலந்து (Holland), பெல்ஜியம் (Belgium).

இரவு.—சுரங்கவேடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

### இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான நிலயம்.—ஸிஸிலியிலுள்ள கெர்பினி (Gerbini).

வண்டிகள்.—லெவ்காஸ் (Levkas) தீவு.

விமான நிலயங்கள்.—கிரீஸிலுள்ள எலியூஸிஸ் (Eleusis), ஹஸ்ஸானி (Hassani).

### ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—யுத்த அரங்கம் முழுவதும்.

அச்சுநாட்டு விமான நிலயங்கள்.—ஆக்கிரமிக்கப்பட்ட ருஷ்யாவில்.

### தூரக்கிழக்கு (Far East).

எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்ட பட்டணம்.—ஸான்லக்கியிலுள்ள பொஸ்ஸார்க்(Possark).

எதிரி வியாபாரக் கப்பல்.—புகா (Buka).

எதிரி கிராமங்கள்.—மார்க்ஸ்ஹாம் (Marxham), ராமு சமவெளி (Ramu).

விமான நிலயம்.—நியூ கினியிலுள்ள ஸாலமூவா (Salamaua).

எதிரி சைனியங்கள்.—நியூ கினியிலுள்ள பிம்பிள் மலை (Pimple)ப் பிரதேசம்.

அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

துருப்புகள், கட்டடங்கள்.— பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab) தீவு.

விமானத்தினின்றும் வேவு பார்த்தல்.—பர்மாவிலுள்ள மாயு (Mayu) தீபகற்பம். அக்யாப் (Akyab) தீவு.

லோயர் சிண்ட்வின் (Lower Chindwin) பிரதேசம், காஹிலி (Kahili), பூயின் (Buin).

நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda).

ராணுவ நிலயங்கள்.—மெயக்டிலா(Meiktila).

பஞ்சுத் தொழிற்சாலை.—பர்மாவிலுள்ள மிங்யான் (Myingyan).

இருப்புப்பாதை.— பர்மாவிலுள்ள மாண்டலே (Mandalay).

எதிரி ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள தான்பியூஸயட் (Thanbyuzayt).

## விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**22—6—43.** (செவ்வாய்க்கிழமை).

### பிரிடன் (Britain).

கலக்கமான இடங்கள்.-தெற்கு இங்கிலாந்து, தென்மேற்கு இங்கிலாந்து.

### ருஷ்யா (Russia).

ஒரு இடம்.—லெனின்கிராட் (Leningrad).

### தூரக்கிழக்கு (Far East).

நேசதேச முன்னேறித்தாக்கும் சைனியங்கள்,-நியூ கினியிலுள்ள மூபோ (Mubo) பிரதேசம்.

**23—6—43.** (புதன்கிழமை).

### பிரிடன் (Britain).

ஒரு பட்டணம்.—வடகிழக்கு இங்கிலாந்து.

### ருஷ்யா (Russia).

சிறிய இடங்கள்.-லெனின்கிராடிற்கு (Leningrad) அருகில்.

### தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள்.—ரஸ்ஸல் (Russel-island)—(1 ஜப்பானிய விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது).

**24—6—43.** (வியாழக்கிழமை).

### பிரிடன் (Britain).

இங்கிலாந்திலுள்ள ஹல் (Hull).

### ருஷ்யா (Russia).

லெனின்கிராட் பிரதேசம் (Leningrad).

### தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

**25—6—43** (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

விமான நடவடிக்கை.—பிரிடனில் எங்கும் இல்லை).

ருஷ்யா (Russia).

ருஷ்யச் சைனியங்கள்.–டானெட்ஸ் (Donets) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

நேசதேசச் சைனியங்கள்.–மூபோ பிரதேசம்.

அமெரிக்கச் சைனியங்கள்.–ரஸ்ஸல் (Russel) தீவு.

**26—6—43** (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை ஏதும் இல்லை.

ருஷ்யா (Russia).

வேவு பார்த்தல்.—ஓரல் (Orel).

தூரக்கிழக்கு (Far East).

கீழே பறந்து செல்லும் விமானங்கள்.—ஸாலமன்ஸ் (Solomons).

**27—6—43.** (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

பகல்.—லண்டன் பிரதேசம்.—(விமான எச்சரிக்கை மட்டும்).

இரவு.–எதிரி விமான நடவடிக்கை ஏதுமில்லை.

ருஷ்யா (Russia).

ஒரு இடம்.—லெனின்கிராடிற்கு (Leningrad) அருகில்.

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை ஏதும் இல்லை.

**28—6—43.** (திங்கட்கிழமை.)

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

ருஷ்யா (Russia).

சண்டைகள்.—லெனின்கிராடிற்கு (Leningrad) அருகில்.

தூரக்கிழக்கு (Far East).

டார்வின் (Darwin) துறைமுகம் (6 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

---

# யுத்தக் குறிப்புகள்.

**படையெடுப்பு பீதி.** ஜூன்மாதம் 26-ம் தேதியன்று பர்மிங்ஹாமில் இந்தியாவின் ஸெக்ரெடரி ஆப் ஸ்டேஸான மிஸ்ட்டர் L. S. அமெரி, "பழிவாங்கும் படையெடுப்பின் சாயையானது எதிரிகளின் பிரதேசங்களில் பரவிவிட்டது. முன்பு இருமாப்புடனிருந்த நமது எதிரிகள் இப்பொழுது அரண்களுக்குப்பின் பதுங்குகிறார்கள். அங்கேயும் நிம்மதியன்று, பீதியடைந்து, தங்களுக்கு எந்த இடத்தில் அடிவிழுமென்று தோன்றாமல் திகைத்து நிற்கிறார்கள்" என்று பேசினார்.

ஜெர்மனிக்கு அதோகதி ஏற்படப்போகிறதென்று டாக்டர் கோயபல்ஸூம் அறிந்திருக்கிறார். அவருடைய பொய் பிரசாரங்கள் இப்பொழுது ஓலமிடுவதாக மாறிவிட்டன. ஜூன்மாதம் 25-ம்தேதி மூனிச்சில் பேசும்பொழுது "ஐரோப்பாவின் நாகரீகமே அழிவுபடுகிறது." என்று கோயபல்ஸ் பிரலாபித்தார். டால்பரெக் என்னும் பத்திரிகையில் ஒரு கட்டுரையில் "யுத்த முடிவுக்கு பிரிடிஷ் அமெரிக்கப்படைகளின் படையெடுப்பு பூர்வாங்கமானது. ஐரோப்பாவில் எந்த இடத்தில் இறங்குவதற்கும் போதுமான கடற்படையும் கவசம்பூண்ட துருப்புகளும் நேசநாடுகளிடமிருக்கிறதென்று ஜெர்மனிக்கு நன்றாய்த் தெரியவரும்" என்று அவர் வெளியிட்டிருக்கிறார்.

மத்தியக் கிழக்கில் நேசநாடுகளின் படை திரட்டுதல் பூர்த்தியாகிவிட்டதென்றும் பிரிடிஷ் 9-வது 10-வது சேனைக்கு உபபலமாக பிரிடிஷ் 8-ம் படையும் அங்கு சென்றுவிட்டதென்றும் ஜெர்மன் ராணுவ நிபுணர்கள் நம்புகிறார்கள். இதாலியப் பத்திரிகைகளில், இதாலியைப் படையெடுப்பதற்கு நேசதேசங்கள் ஆயத்தமாகவிருக்கின்றனவென்று எச்சரித்திருக்கிறது.

எவ்விடத்தில் நேசதேசப்படையெடுப்பு ஏற்படுமென்று உலகம் பூராவும் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றது. அனுமானம் செய்கிறவர்களோடும் ஜோஸியம் சொல்லுகிறவர்களோடும் கலந்துகொள்ளாமல் நாம் தனியேநின்று நேசநாடுகள் எவ்வளவு பிரமாதமான காரியத்தை நடத்தப்போகிறார்களென்பதை சற்று நிதானிக்கவேண்டும்.

ஐரோப்பா கண்டமானது பான்டலேரியா, லாம்படூஸா, வடஆபிரிக்கா போன்றதல்ல. பான்டலேரியாவும் லாம்படூஸாவும் வீழ்ச்சிபெற்றபின் ஸிஸிலியிலும், ஸார்டீனியாவிலும் இதாலியர்களின் சமாளிப்பு யுத்தம் பலமடைந்துவிட்டது. துருப்புகளிறங்குவதற்கு ஸ்தானங்களும் தரையில் போக்குவரத்து மார்க்கங்களுமிருந்தபொழுதே எல் அலாமீனின் வீழ்ச்சிக்குப்பின் வட ஆபிரிக்காவைப் பிடிப்பதற்கு நேசதேசங்களுக்கு ஆறுமாதங்களாகிற்று. ஐரோப்பாவில் இறங்கித் தாக்குவதென்றால் நேசதேசத் துருப்புகளும் ஸப்ளைகளும் கடல் தாண்டிச் செல்லவேண்டும். அச்சுநாடுகளைத்தாக்குவதற்கு பிரிடனும் வட ஆபிரிக்காவும்தான்

முக்கியமான பாய்ச்சல் ஸ்தலங்கள். சமீபமாகமுள்ளதும் சிறந்த முஸ்தீப்புகளுமுள்ள தளமாகிய பிரிடனுக்கு எதிர்த்த கடற்கரையில் எதிரி மூன்று வருஷங்களாக அரண்களை அமைத்துவருகிருன். அச்சுநாடுகளின் அடிவயிறு என்று சொல்லக்கூடிய தெற்கு ஐரோப்பா வானது படையெடுப்புக்கு லாயக்குள்ளதென்ருலும் அது வட ஆபிரிக்கா தளத்திலிருந்து வெகு தூரத்திலிருக்கிறது. மேலும் இதாலியையும், தெற்கு பிரான்ஸையும் பால்கன் நாடுகளையும் தாக்கினுல்மட்டும் யுத்தம் முடிவடையாது. அவைகளைப்பிடிப்பது ஜெர்மனியைப் படையெடுப்பதற்குப் பூர்வாங்கமான நிகழ்ச்சியாகும். ஆகையால் நேசதேசப் படையெடுப்பு இதுவரையில் நடைபெருததற்கும் இன்னமும் நேசதேசங்கள் ஆயத்தம் செய்வதற்கும் தகுந்த காரணங்களிருக்கின்றன.

வி வி வி வி வி

**விமான யுத்தம்.** ஜூன்மாதம் 24-ம் தேதியன்று ஜெர்மன் யுத்த நிருபரான ஹான்ஸ்வான் பிளேடோ, ஜெர்மனியை நேசதேச விமானங்கள் தாக்குவதைப்பற்றி ஒலிபரப்புப் பிரசங்கம் செய்தார். அதன் விவரம் பின்வருமாறு.

"வார்ஸா பிடிபட்டபின் அதைப் பார்வையிட்டேன். கலேயிலுள்ள ஒவ்வொரு வீடும் நொருக்கப்பட்டபின் அதையும் பார்வையிட்டேன். ருஷ்யாவில் நகரங்களாகயிருந்து அரண்களாகமாறி ஜெர்மன் வெடிகுண்டுகளுக்கும் பீரங்கிக் குண்டுகளுக்கும் லக்ஷியமான பிரதேசங்களையும் பார்வையிட்டேன். இருந்தாலும் மேற்கு ஜெர்மனியில் ஒவ்வொரு இடத்திலும் ஏற்பட்ட காக்ஷிகள் நான் முன்பு கண்ணுற்றவைகளை விட கோரமாகயிருக்கிறது." மற்ருெருவர் அன்றுதினமே ஒலிபரப்பில் ஒலிபெருக்கினர். "ரூர் பிரதேசத்தில் ஏற்படும் வெடி விமானத் தாக்குதல்கள் பலமானவைகள். இந்த நிகழ்ச்சிகளை வர்ணிக்கமுடியாது. ஒரு வருஷத்துக்குமுன் 20-டன்களே எடைமானமுள்ள வெடிகுண்டுகள் போடப்பட்ட பிரதேசங்களின்பேரில் இப்பொழுது அநேக இஞ்ஜின்களுள்ள வெடி விமானங்கள் ஆயிரக் கணக்கான டன்கள் எடைமானமுள்ள வெடிகுண்டுகளை வர்ஷிக்கின்றன. இதை விஞ அடுத்தமாதம் முதல் வெடிகுண்டு வீச்சு 45 சத விகிதம் அதிகரிக்கப்படுமென்று நேசதேசங்கள் சொல்லுகிருர்கள். வெடிகுண்டு வீசுவதில் புதிய முறைகளும் கையாளப்படுகின்றன. ஜூன்மாதம் 24-ம் தேதியன்று வெடிகுண்டு வீசும் சரித்திரத்தில் நூதனமான ஒரு சம்பவம் ஏற்பட்டது. பிரிடிஷ் தளங்களிலிருந்து புறப்பட்ட பிரிடிஷ் வெடி விமானங்கள் கான்ஸ் டென்ஸ் ஏரிக்கரையிலிருக்கும் ப்ரீட்ரிக்ஷெபன் என்னுமிடத்திலுள்ள ரேடியோ லோகேஷன் கருவிகளை உண்டுபண்ணும் தொழிற்சாலையைத் தாக்கிவிட்டு, வட ஆபிரிக்கா வுக்குச் சென்று திரும்பிவரும்பொழுது இதாலியிலுள்ள ஸ்பீஸியாவையும் தாக்கின.

ரூர் பிரதேசம் தான் பலமாக அழிக்கப்படுகிறது. இது ஒவ்வொரு நாளும் தாக்கப்படுகிறது. இந்தப் பிரதேசத்தைவிட்டு வெளியேற 1,00,000 ஜனங்கள் தயாராகயிருக்கிருர்கள். இந்த குண்டுவீச்சுகளின் நோக்கங்கள் பலவகைப்பட்டவை. ரூர் பிரதேசத்திலுள்ள நிலக்கரி உற்பத்தியை அழித்துவிடுவது, அதன் மூலம் எஃகு உற்பத்தியும் அதன் மூலம் ஆயுத உற்பத்தியும் குறைவுபட்டுவிடவேண்டியது. மார்ச்சு 5-ம் தேதியன்று தான் முதல் முதலில் எஸ்ஸெனேயும் ரூர் பிரதேசத்தையும் இடைவிடாது தாக்கும் முறை ஆரம்பமாயிற்று. அதற்குப்பின் 21 தடவை ரூர் பிரதேசம் பலமாகத் தாக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தடவையிலும் 1,000, 2,000 டன்கள் எடைமானமுள்ள குண்டுகள் வீசப்பட்டன. குறைந்த பக்ஷம் 11 முக்கியமான தொழிற்சாலை ஸ்தானபங்கள் நிர்மூலமாகிவிட்டன.

வி வி வி வி வி

**ரூர் பிரதேசம்.** ரூர் என்று சொல்லப்படும் மேற்கு ஜெர்மனியானது ஜெர்மனியின் நிலக்கரி, இரும்பு உற்பத்தி ஸ்தானம். யுத்தச் செய்திகளில் தாக்கப்பட்டதாகச் சொல்லப்படும் லக்ஷியங்களெல்லாம் ரைன் நதிக் கரையில் 400 மைல்கள் மத்தியரேகையுள்ளதும் வப்பர்தால் என்னும் மத்திய பாகமுள்ள ஒரு வட்டத்துக்குட்பட்டவை. இந்த வட்டத்திற்குள் கொலோனும், கெல்ஸன் கெர்ச் சனும், டூயிஸ்பர்க்கும், டார்ட்மண்டும், போகமும், எஸ்ஸனும், ஓபர்ஹாஸனுமிருக்கின்றன. அவைகளில் கடைசியாகச் சொல்லப்பட்ட நான்கு இடங்களும் ரூர் நதி பள்ளத்தாக்கிலிருக்கின்றன. டூயிஸ்பர்க் என்னுமிடத்தில் ரூர் நதி ரைன் நதியுடன் சங்கமமாகுகிறது. ரூர் நதியின் உபநதியான என்னெப்பி நதியின் பள்ளத்தாக்கிலுள்ள என்னப்பி ஸ்ட்ராஸி என்ற இரும்பு, எஃகு, தொழிற்சாலையும் ரூர் பிரதேசத்தைச் சேர்ந்தது தான். இங்கே நிலக்கரி சுரங்கங்களிருக்கும் பிரதேசத்தின் மத்தியில் போகமும் டார்ட்மண்டுமிருக்கின்றது. கொஞ்ச தூரத்துக் கப்பால் ஹாம் என்னுமிடத்தில் ரூர் பிரதேசத்திலுள்ள இருப்புப்பாதைகள் கூடும் ஜங்ஷனிருக்கிறது. ரைன் நதி பள்ளத்தாக்கில் காப்ளென்ஸும், கொலோனும், வப்பர்தாலும் (பார்மன் எல்பிர் பிராந்தியம்), ஸோலிங்கன், டஸ்ஸல்டார்ப், கிரெபெல்டு முதலிய

இடங்களிருக்கின்றன. டஸ்ஸல்டார்ப் என்பது ரூர் பிரதேசத்துக்கு மத்திய ஸ்தானம். ரைன் பிரதேசம் ஆயுத உற்பத்திசாலைகளுள்ளது.

ரூர்—ரைன் நதிப் பிரதேசத்திலுள்ள தொழிற்சாலைகள் பிரிடனிலிருந்து செல்லும் விமானங்களுக்கு இரண்டு மணியில் செல்லக்கூடியவை. ஜெர்மனிக்குத் தேவையான இரும்பு, எஃகு, நிலக்கரியின் நாலில் மூன்று பாகத்தை உண்டுபண்ணக்கூடிய பிரதேசங்கள். இந்தப் பிரதேசங்களில் முக்கியமான ரசாயன உற்பத்திசாலைகளுமிருக்கின்றன. யாங்கர்ஸ் விமான தொழிற்சாலையை டேஸானுக்கும் ஹெர்மான் கோயரிங் தொழிற்சாலையை ஆஸ்திரியாவிலுள்ள லின்ஸுக்கும் ஜெர்மானியர்கள் கொண்டுபோனாலும், போலந்திலுள்ள அழிவுபட்ட தொழிற்சாலைகளை ஜெர்மானியர்கள் பகிரதப் பிரயத்தனம் செய்து மறுபடியும் அமைத்தாலும், அல்லது தொழிற்சாலைகளை அமைக்க பாதாளத்தில் கட்டடங்களை தீர்மானம் செய்தாலும், எந்நிலைமையிலும் ரூர் பிரதேசத்திலுள்ள உருக்கு, வார்ப்பு தொழிற்சாலைகளை அவர்கள் அப்புறப்படுத்த முடியாது. ஆகையால் ரூர் பிரதேசத்தை அழித்துவிடுவதென்பது ஜெர்மனியை முறியடித்தது போலாகும்.

வி வி வி வி வி

**ருஷ்யா.** ஜூன் மாதம் போய்விட்டது. ஜெர்மன் முன்னேற்ற யுத்தம் நடைபெறவில்லை. சென்ற வருஷம் இந்நாட்களில் ஜெர்மனி ஸ்டாலின்கிராட்டையும் கிராஸ்னி எண்ணெய் பிரதேசத்தையும் பிடிக்கும் உத்தேசத்துடன் முன்னேற ஆரம்பித்துவிட்டது. ருஷ்யப் போர் முனையில் ஜெர்மானியர்கள் சில இடங்களில் சிறிய போர்களைத்தான் நடத்திவருகிறார்கள். இவைகளிலும் ஜெர்மனிக்கு நஷ்டமேற்படுகிறது. ருஷ்யாவின் மாரிகால எதிர்ப்பு யுத்தம் முடிந்து இரண்டு மாதங்களாக நிம்மதியாகயிருக்கும் பொழுது கூட, ஜெர்மனிக்கு லெனின்கிராட்டிலிருந்து கருங்கடல் வரையிலுள்ள போர் முனையில் 3, 4 டிவிஷன் துருப்புகள் நஷ்டமாயிருக்கின்றன.

எதிரி தாமதம் செய்வதற்கு அச்சமும், பீதியும், தோல்வியின் படிப்பினையும் விருத்தியடைந்து வரும் ருஷ்ய பலமும் காரணங்களாகும். அனுபவத்திலிருந்து, ருஷ்யாவில் ஏற்படும் வெற்றிகள் பிரயோஜனமற்றவை யென்று ஹிட்லர் அறிந்து விட்டான். சென்ற மாரி காலத்தில் ஜெர்மானியர்கள் வேனிற் காலத்தில் கைப்பற்றிய பிரதேசங்களை ருஷ்யர் மீட்டதோடு மட்டுமில்லாமல் மிலியன்கணக்கான மனிதர்களையும் அழித்துவிட்டார்கள். ஜெர்மானியர் முன் கோரமாக நிற்கும் மற்றொரு ரூபமானது, தெற்குப் பக்கத்திலும் மேற்குப் பக்கத்திலும் நேசநாடுகளின் படையெடுப்பு ஏற்படப்போகிறது என்ற பயம்.

ருஷ்யாவுக்கு நேசதேசங்கள் மேன் மேலும் தளவாடங்களை அனுப்பிவருகிறார்கள். மூன்ருவது வருஷ யுத்த ஆரம்பத்தில் ருஷ்யா அதிக நம்பிக்கையுடனிருக்கிறது. சென்ற வருஷம் இதே சமயத்தில், மாஸ்கோவுக்கு ஏற்படவிருந்த அபாயத்தைத் தடுத்து விட்டபோதிலும் ருஷ்யாவின் நிலைமை மோசமாகயிருந்தது. இப்பொழுது மாரிகாலத்தில் ருஷ்யாவுக்குக் கிடைத்த வெற்றியாலும் வட ஆபிரிக்காவில் நேசதேசங்களுக்கு ஏற்பட்ட வெற்றியாலும் ருஷ்யாவின் நிலைமை மாறி, எதிரியின் தாக்குதலைச் சமாளித்து விடலாம் என்ற நம்பிக்கையுடனிருந்து வருகிறது.

வி வி வி வி வி

**அல்ஜியர்ஸ் ஒப்பந்தம்.** நேசதேசத்தாரின் மத்தியஸ்தத்தின் பயனாக ஜெனரல் டிகாலுக்கும் கிராட்டுக்குமுள்ள அபிப்பிராய பேதங்கள் சமரசப்பட்டுவிட்டன. ஆல்ஜியர்ஸிலிருந்து ஜூன் மீ 22-ம் தேதி வெளிவந்த செய்திகளில், இரண்டு ஜெனரல்களும் அவர்களுடைய சிப்பந்திகளும் கொண்ட நிரந்தரமான ஒன்றுபட்ட ஸ்வதந்திர பிரெஞ்சு கமிட்டி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. வடக்கு, மேற்கு ஆபிரிக்காவிலுள்ள சேனைகளுக்கு கிராட் தளகர்த்தராகயிருப்பார். இதர பிரெஞ்சு துருப்புகளுக்கு டிகால் தளகர்த்தர். இரண்டு சேனாதிபதிகளும் ஒத்துழைப்பார்கள். சேனைகளிரண்டும் பொதுவான பொக்கிஷத்திலிருந்து ஊதியம் பெறும். பிரெஞ்சு தேசிய விடுதலைக் கமிட்டியின் அமுலுக்குட்பட்டிருக்கும்.

ஸ்தானத்திற்கும் அதிகாரத்திற்கும் அநேக மாதங்களாக சச்சரவு நடைபெற்று கடைசியாக சமரசம் ஏற்பட்டு விட்டதென்று நாம் சந்தோஷிக்கிறோம். முக்கியமாக, ஐரோப்பாவை படையெடுக்க நேசநாடுகள் தயார் செய்து கொண்டிருக்கும் பொழுதும், நேசநாடுகளுக்குள் ஒற்றுமை அவசியமானதுமான இத்தருணத்தில் இவ்விதம் சமரசம் ஏற்பட்டது விசேஷமானது. ஜெனரல்கள் இருவரும் தங்களுக்குள்ள எல்லா அபிப்பிராய பேதங்களையும் சரிப்படுத்திவிட்டார்களென்று நான் சொல்லவில்லை. பிரான்ஸின் வருங்காலத்தில் ஸ்தாபிக்கப்படவேண்டிய அரசியலைப் பற்றி அபிப்பிராய பேதமிருந்து வருகிறது. பிரெஞ்சு சேனையை சீர்திருத்தம் செய்ய ஒவ்வொருவரும் வெவ்வேறு திட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். உடன் காலத்தி

லேயே நவீன முறையில் ஆயுதங்களைச் சேகரிக்கவேண்டுமென்றும் வாலிபமான உத்தியோகஸ்தர்களை நியமிக்கவேண்டுமென்றும் டிகால் சொல்லும் பொழுது, கிராட் சாவதானமாக சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று அபிப்பிராயப்படுகின்றார். இறுதியில் எவர் சேனாதிபதியாக இருக்கவேண்டியதென்ற பிரச்னையும் பாக்கியிருக்கிறது.

இருவகைப்பட்ட அமுல் ஸ்தாபிக்கப்பட்ட போதிலும், அதினின்றும் சிக்கல்கள் ஏற்படாதென்று நம்புகிறோம். நடைபெற்ற வரையில் நல்லறிவு தோன்றி சமரசம் ஏற்பட்டதென்பதில் சந்தோஷிக்கிறோம்.

வி வி வி வி வி

**மத்தியதரைக்கடல்.** அச்சு நாடுகளுக்கு மிருத்யு சமுத்திரம் என்று சொல்லப்படும் மத்தியதரைக்கடல் யுத்தத்தில் முக்கியமான பிரதேசமாகயிருக்கிறது. இங்கு பிரிடிஷ் கடற்படைக்கு ஒத்தாசை செய்ய அமெரிக்க கடற்படையும் வந்துவிட்டது. ஜெர்மன், இதாலிய நீர்மூழ்கிகளை அவர்கள் மத்தியதரைக் கடலுக்குத் திரும்பிவரும்படி உத்தரவிட்டுவிட்டார்கள். பாரிஸ் என்பவர் ஹெலன் என்பவளை அபகரித்துக்கொண்டு ட்ராய் நகருக்குச் சென்றது போல மத்தியதரைக்கடல் யுத்தமானது தேசங்களுடையவும் ஸமஸ்தானங்களுடையவும் கதிமோக்ஷத்தை அளித்துவிட்டது. இதன் கடற்கரைகளில் அநேக சாம்ராஜ்யங்கள் தோன்றி அழிவுபட்டிருக்கின்றன. அதாவது ஸஷிபன், போனீஷியன், கிரேக்கன், ரோமன் சாம்ராஜ்யங்கள். இங்கு வெனிஸூம் ஜெனோவாவும் புகழ்பெற்று அழிவுற்றன. இங்கு கோத் ஜாதியாரும், வாண்டல் ஜாதியாரும் அரபியரும் வந்தார்கள். ஸூயஸ் கால்வாயை திறந்த உடன் இந்த மத்தியதரைக்கடல் கிழக்குக்கும் மேற்குக்கும் முக்கியமான கடல் மார்க்கமாக ஆகிவிட்டது. இந்த சமுத்திரத்தில்தான் அச்சுநாடுகளை எதிர்த்து நிற்கும் ஸ்வதந்திர நாடுகள் யுத்தம் செய்யப் பேசுகிறார்கள்.

கடலின் மத்தியில் பிரிடனின் பலமான தற்காப்பு நிலயமான மால்டா தீவிருக்கிறது. 100 சதுர மைல்களுக்குட்பட்ட பரப்பு உள்ள இந்தத் தீவு ஜெர்மனி, இதாலி இவ்விரண்டின் ஒன்றுபட்ட பலமான தாக்குதல்களைச் சமாளித்துவிட்டது, இதின் பேரில் மற்ற தீவுகளைவிட ஏராளமான கனமான வெடிகுண்டுகள் வீசப்பட்டன. 1942-ம் வருஷம் அக்டோபர் மாதம் வரையில் இங்கே 3,000 தடவைகள் அபாயச் சங்குகள் ஒலித்திருக்கின்றன. 1,666 தடவை விமானத் தாக்குதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. 1,400 ஜனங்கள் உயிர் துறந்தார்கள். 6,600 கட்டடங்கள் நாசமாகிவிட்டன. எதிரியின் 1,000 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன, இன்னும் மால்டாவின் தைரியம் குன்றிவிடவில்லை. தற்காப்பு முறையை விட்டு மால்டா முன்னேற்ற யுத்தத்தை ஆரம்பித்து மத்தியதரைக்கடலிலுள்ள அச்சு நாடுகளின் தளங்களைத் தவிடுபொடி செய்து வருகிறது. சாம்ராஜ்ய நாடுகளுக்குள் விக்டோரியா கிராஸ் பதக்கம் பெற்ற பெருமையையடைந்த மால்டா நமது மன்னர்பிரான் விஜயம் செய்த பெருமையையும் பெற்றுவிட்டது.

வி வி வி வி வீ

**பால்கன் நாடுகள்.** மத்தியதரைக்கடல் பிரதேசத்தில் இதாலி பேரில்தான் நேசநாடுகள் படையெடுப்பது சம்பாவிதமாகிலும், யுத்ததந்திர முறையில் படையெடுப்புக்கு பால்கன் நாடுகள்தான் முக்கியமானவை. இரண்டுவருஷங்களுக்குமுன் ருஷ்யாவைப் படையெடுக்குமுன் ஜெர்மானியர்கள் பால்கன் நாடுகளை முதலில் கைப்பற்றி பலப்படுத்திக்கொண்டார்களென்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். ருஷ்யாவுக்கு உதவியளிப்பதற்கு இந்த மார்க்கத்தைத் திறந்துவிடுவது அவசியமாகும். மேலும் ஐரோப்பாவின் தெற்குக்கரையில் பால்கன்நாடுகள் தான் பலஹீனமானவை. ஜெர்மன் உதவியன்னியில் இதாலியர்கள் பால்கன் நாடுகளைப் பாதுகாக்க முடியாது இங்கே ஜெர்மன் விமானப்படையும் பலஹீனமாக யிருக்கிறது. இங்கே நேசநாடுகளுக்கு உதவி கிடைக்கலாம். நேசநாடுகளுக்குச் சிறிது வெற்றிகிடைத்துவிட்டால் பல்கேரியாவும், ருமேனியாவும் ஹங்கேரியும் ஒன்றன்பின் ஒன்றாய் அச்சுநாடுகளை விட்டகன்றுவிடும். ஹங்கேரி அச்சுநாட்டாரின் காவலுக்குட்பட்டிருக்கிறது. ருமேனியாவில் அருவருப்பு ஏற்பட்டிருக்கிறது. குரோஷியாவில் பொருளாதார நிலைமை மோசமாகயிருக்கிறது. ஸ்லவோனியா, ஸெர்பியா, பாஸ்னியா முதலிய இடங்களில் கலவரம் உண்டாகிவிட்டது. கிரீஸின் விரோத மனப்பான்மை ஸ்பஷ்டமானது. ஊலுஸ் பத்திரிகையில் எழுதியிருப்பது போல் ஜெர்மனியின் ராணுவபலம் இப்பொழுதும் மகத்தானது ஆகிலும் அதற்கு ஏற்பட்டிருக்கும் சிரமங்களும் பொறுப்புகளும் நான்கு வருஷங்களுக்கு முன்னிருந்ததைவிட ஏராளமாக அதிகரித்திருக்கின்றன. ஆக்கிரமிப்பு நாடுகளிலெல்லாம் கபடமாக எதிர்ப்பு ஆரம்பித்துவிட்டது. படையெடுப்பு ஏற்படும்பொழுது, ஜெர்மானியர்கள் படையெடுப்பைச் சமாளிக்க முயற்சி செய்வதுடன், ஜெர்மனாதிக்கத்துக்குட்பட்ட ஜனங்கள் செய்யக்கூடிய கலவரங்களையும் அடக்கியாளவேண்டும்.

**மத்தியக் கிழக்கு.** மத்தியக் கிழக்கில் விசேஷ சம்பவங்கள் நடைபெறுகின்றன. மத்தியக் கிழக்கு என்னும் பிரதேசம் ஜெர்மனி கிழக்கே முன்னேறுவதைத் தடைசெய்கிறது. துருக்கியுடனும் ருஷ்யாவுடனும் சேர்ந்தார்ப் போலிருக்கிறது. இந்த பிரதேசத்தில் வருஷத்துக்கு 15 மிலியன் டன்கள் எடைமானமுள்ள பெட்ரோல் ஸப்ளை செய்யும் பாரஸீக இரான் எண்ணெய் பிரதேசங்களிருக்கின்றன. தென் கிழக்கு ஐரோப்பாவில் படையெடுப்பதற்கு இது முக்கியதளமாகத் தயாராகிவருகிறது. நான்கு மாதங்களுக்குமுன் மத்தியக்கிழக்கு துருப்புகளுக்கு சேனபதியான ஸர் ஹென்றி மெயிட்லாந்து வில்ஸன் இவ்விடத்தில் தளங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டதாகக் கூறினர். கெயிரோவில் ஒன்றுகூடின பொதுஜன அதிகாரிகளும், ராணுவ அதிகாரிகளும் "மத்தியக் கிழக்கில் நேசதேசத்தார்களிடம் மகத்தான படைகளிலிருக்கிறதென்றும் மத்தியக் கிழக்கு பெரிய ராணுவ முகாம் என்றும், ஒரு பெரிய தளமென்றும் சென்ற மாதத்தில் வெளியிட்டார்கள். இவ்விடத்தில் பாலஸ்தீனத்திலிருக்கும் 9-வது படை யுத்தத்துக்குத் தயாராக யிருக்கிறது. 10-வது சேனை பாரஸீகத்திலும் இராக்கிலும் முகாம் செய்திருக்கிறது. இவ்விடத்திற்கு பிரிடிஷ் 8-வது படையும் வந்துவிட்டது. பிரிடிஷ் கடற்படை ஹைபாவிலும் பேரூட்டிலும் நின்றுகொண்டிருக்கிறது.

வி வி வி வி வி

**அமெரிக்க நிலக்கரி தொழிலாளர்களின் வேலை நிறுத்தம்.** சென்ற மூன்று மாதங்களாக நடைபெற்றுவரும் அமெரிக்க நிலக்கரி தொழிலாளர்களின் வேலை நிறுத்த இயக்கம் இப்பொழுது பலமடைந்துவிட்டது. இதிலிருந்து யுத்த தளவாட உற்பத்திகள் பாதிக்கப்படுகின்றன. நிலக்கரி குறைவு ஏற்பட்டுவிட்டதிலிருந்து எஃகு உற்பத்தி பாதிக்கப்பட்டுவிட்டது. அமெரிக்கா தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவரான மிஸ்டர் ஜான், L. லூயி, ஊதிய அதிகரிப்பு வேண்டுமென்று கிளர்ச்சி செய்வதுடன், ராஜீயமுறையில் ஜனதிபதியின் அதிகாரத்தைக் குறைவுபடுத்தவும் முயன்று வருகிறான். யுத்த தொழிலாளர்கள் போர்டின் அதிகாரத்துக்குட்படவும் அவன் மறுத்து விட்டான். அமெரிக்க நிலக்கரி நிர்வாகியான மிஸ்டர் ஹாரோல்ட் இக்ஸினுடைய அதிகாரத்தையும் அவன் புரக்கணித்துவிட்டான். அச்சுநாடுகள் இந்த நிலைமையைக்கண்டு குதூகலமடைகிறார்கள். மிஸ்டர் லூயின் நடத்தை பெரிய ராஜ துரோகமாகும். இவன் எதிரிக்கு உதவி செய்துவருகிறான். இதை விஞ ஜனப்பிரதிநிதி சபையின் நடவடிக்கையும் திருப்திகரமாகயில்லை. நிலைமை மோசமாகும் போலிருக்கிறது. ஆகிலும் ஜனதிபதி ரூஸ்வெல்டு திடசித்தமுள்ளவன். சுரங்க வேலைக்காரர்களுக்கு நல்லறிவு வந்துவிட்டதென்றும் வேலைக்கு அவர்கள் திரும்பி வருகிறார்களென்றும் தகவல் கிடைத்திருக்கின்றன. நல்ல நடவடிக்கை உண்டாகுமென்று நாம் எதிர்பார்க்கிறோம்.

வி வி வி வி வி

**தீரத்துக்குப் பாராட்டு.** வட ஆபிரிக்காவுக்கு மன்னர்பிரான் விஜயம் செய்தபொழுது 2-வது குர்க்கா துப்பாக்கிப் படையைச் சேர்ந்த சுபேதார் லால்பகதூர் தாபாவின் உயர்தர தீரத்துக்காக அவருக்கு விக்டோரியா கிராஸ் பதக்கத்தை மன்னர் நேரில் சூட்டினர். ராஸ்ஸி ஸாண்டி என்னுமிடத்தில் தன்னுடைய உயிரை லக்ஷியம் செய்யாமல் சுபேதார் முன்னேறி எதிரியைக்கொன்று கியாதி பெற்றான். உத்தியோக முறையில் அவனுடைய தீரத்தைப்பற்றி விவரிக்கும் பொழுது, சுபேதாரின் தலைமையும் தீரமும் தான் பூரா நிகழ்ச்சிகளும் வெற்றிகரமாக முடிவடைந்ததற்குக் காரணங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்தியத் துருப்புகளைப் பாராட்டி அடுத்த வைஸிராயாக நியமிக்கப்பட்டிருக்கும் பீல்டு மார்ஷல் வேவல் சமீப காலத்தில் ஒரு செய்திவிடுத்திருக்கிறார். ஜூன் மாதம் 22-ம் தேதி அவர் விடுத்த வெளியீட்டில் பின் வருமாறு கூறியுள்ளார். "இந்த சந்தர்ப்பத்தில், யுத்தத்தில் ஈடுபட்ட இந்தியத் துருப்புகளின் தீரத்துக்கும் ராஜவிசுவாசத்துக்கும் புகழுரை விடுக்க உத்தேசிக்கிறேன். எனக்கு யுத்தத்தில் ஏற்பட்ட வெற்றிகளுக்கு இந்தியப்படைகளின் அரிய சேவை தான் காரணம்".

வி வி வி வி வி

**புதுக்கோட்டையில் யுத்த முயற்சிகள்.** ஸமஸ்தானத்திலுள்ள தானியத்தைச் சேமித்துவைக்கவும். அதின் உபயோகத்தைக் கட்டுப்படுத்தவும், தனிப்பட்டவர்களின் தேவைக்கு அதிகமான தானியத்தை ஸர்க்கார் வசப்படுத்தும்படி ஈ-தர்பார் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஈ-தர்பார் அவர்கள் உத்தரவன்னியில் அவைகளை விற்பனை செய்யக்கூடாது.

ஸமஸ்தான கஜானுக்களில் பைசா நாணயக் குறைவு ஏற்பட்டிருப்பதால் ஸர்க்காருக்கு செலுத்தவேண்டிய தொகைகளும் ஸர்க்காரால் கொடுக்கப்படும் தொகைகளும் அரையணு கணக்கில் கொடுக்கப்படும். காலணவும் அதற்குக் குறைந்தவைகளும் தள்ளுபடி செய்யப் படும். சட்டப்படிக்கும், ஒப்பந்தப்படிக்கும் ஏற்பட்ட விகிதங்களும் புஸ்தகப் பதிவுகளில் எழுதப்படும் கணக்கு விவரங்களும் இந்த ரூலுக்கு விலக்குகள் என்று அரசாங்கத்தார் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

---

## ஆபிரிக்கா ஸ்டார் பதக்கமும், 1939–43 ஸ்டார் பதக்கமும்.

ஜெனரல் ஈசன் ஹோவருக்கு நமது மன்னர் அனுப்பியிருக்கும் செய்தியில், வட ஆபிரிக்கா வெற்றியைத் தாம் கொண்டாட முடிவு செய்திருப்பதாகவும் அதன் ஞாபகார்த் தமாக ஆபிரிக்கா ஸ்டார் என்ற பதக்கத்தை வழங்கப்போவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

இதர் போர்முனைகளில் ஈடுபட்டிருப்போருக்கு 1939—1943 ஸ்டார் என்ற பதக்கம் வழங்கப்படுமென்றும் அவர் அறிவித்திருக்கிறார்.

இதே செய்தியில் அவர் தெரிவித்ததாவது. அநேக வருஷங்களாக நிலைமை அடிக்கடி மாறிக்கொண்டிருந்த வட ஆபிரிக்கப் போர்முனைக்கு விஜயம் செய்து பிரசித்திபெற்ற யுத்த களத்தை நேரில் பார்க்க ஆசைப்பட்டேன். இதில் கலந்து கொண்டவர்களையும் சந்திக்க ஆவல் கொண்டிருந்தேன்.

என்னுடைய மனோபீஷ்டம் பூர்த்தியாகிவிட்டது. ராணுவ சரித்திரத்திலேயே சிறப்பாக விளங்கக்கூடிய இந்த வெற்றியை சாம்ராஜ்யத்திலுள்ள சர்வ ஜனங்களின் சார்பாக பாராட்டும் பெருமை எனக்குக் கிடைத்துவிட்டது. இந்த வெற்றியை நான் கொண்டாட முடிவு செய்திருக்கிறேன். அதன் ஞாபகார்த்தமாக வட ஆபிரிக்கா ஸ்டார் என்ற பதக்கத்தையும், இதர போர்முனைகளில் ஈடுபட்டிருப்போருக்கு 1939—1943 ஸ்டார் என்ற மற்றொரு பதக்கத்தையும் வழங்குவதாக நான் உத்தேசித்திருக்கிறேன்.

### வெற்றியில் நம்பிக்கை.

என்னுடைய சுற்றுப்பிரயாணத்தின் பொழுது யுத்தத்தில் ஈடுபட்ட மூவகைப்பட்ட படைகளையும், லிபியா பாலைவனத்தில் சண்டை செய்த வீரர்களையும் மேற்குப் பக்கத்திலிருந்து வந்திருக்கும் அவர்களுடைய சகோதரர்களையும் அவர்களுடைய மனெல்லாஸத்தையும் திட சரீரத்தையும் கண்டு சந்தோஷமடைந்தேன். அவர்கள் எல்லோரும் ஒருவரோடு ஒருவர் ஒத்துழைத்ததுடன் யுத்த சமயத்திலும் சாதாரண காலத்திலும் நேசதேசப் படை களுடன் அவர்கள் ஒன்றுபட்டிருந்ததையும் கண்டு ஆனந்தமடைந்தேன்.

அமெரிக்க, பிரெஞ்சு மக்கள் எனக்கு விருந்திட்டு என்னைக் கௌரவித்தபொழுது நான் விஷயங்களை கவனித்ததிலிருந்து நேசநாடுகளின் பூர்ணமான இறுதி வெற்றியில் எனக்கிருந்த நம்பிக்கை வலுவடைந்தது.

ஆகிலும் வட ஆபிரிக்காவிலுள்ள துருப்புகள் ரொம்பவும் கஷ்டப்படவேண்டியிருக்கும். எந்நிலைமையிலும் இதுவரையில் மகத்தான வெற்றி பெற்றநேசதேசத் துருப்புகளின் தீரத்தை ஒரு சிரமமும் தடை செய்யமுடியாது என்பது என்னுடைய நம்பிக்கை.

துருப்புகளுக்கும், அவர்களுடைய சேனாதிபதிகளுக்கும், அவர்களின் அரிய செய்கைகளுக்கு என்னுடைய நன்றியையும் வருங்காலத்தில் அவர்களுக்குக் க்ஷேமமுண்டாகு மென்ற என்னுடைய மனமார்ந்த ஆசியையும் தெரிவிக்குமாறு கோருகிறேன்.

---

## வெற்றி தோன்றிவிட்டது.

நாம் யுத்தத்துக்கு வேண்டிய சகலவிதமான முஸ்தீப்புகளையும் தயாரித்துவிட்டோம் எதிரியின் முஸ்தீப்புகள் உற்பத்தியின் உன்னத ஸ்திதியை அடைந்து இப்பொழுது குறைவு பட்டுவருகின்றன, பயங்கரமான முடிவு ஏற்படப்போகிறதென்று அவர்கள் தெரிந்துகொண்டு விட்டதால் ஹிட்லரும் முஸோலினியும் எவ்வித காரியத்தையும் செய்யத் துணிந்துவிடுவார்கள். முடிவான யுத்தம் நடைபெறுமுன் நிர்க்கதியற்றவன் துணிவது போல ஜனங்களை யுத்தம் செய்யும்படி அவர்கள் தூண்டிவிடுவார்கள்.

அவர்களுக்கு வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை போய்விட்டது என்றே சொல்லலாம். ஆகிலும் உலகம் பூராவும் சோர்வடைவதற்கும், உலகப் போக்கில் அசையா நிலை

ஏற்படுவதற்கும், யுத்தத்தில் ராஜி செய்து சமாதானம் பெறுவதற்கும் எதிரிகள் யுத்தம் புரிவார்கள். அவ்வித சமாதானம் ஏற்பட்டால்தான் அவர்களுக்கு அவகாசம் கிடைக்கும். மற்றொரு யுத்தத்தை அவர்களுக்குச் சௌகரிய நிலைமை ஏற்படும்பொழுது அவர்கள் ஆரம்பிக்க ஹேதுவாயிருக்கும்.

மேனாட்டு நாகரீகம் நிலைபெறவேண்டுமானாலும் முன்னேற்றமடைய வேண்டுமானாலும் ஆயுதபாணிகளாகவேயிருந்து சமாதானம் ஏற்படுத்துவது உதவாது. அவ்விதம் செய்தால் மற்றொரு உலக யுத்தத்துக்கு அஸ்திவாரம் போட்டது போலாகும்.

பூர்ணமாக நிபந்தனையற்ற வெற்றி நமக்குக் கிடைக்கப்போகிறது. ஆகிலும் ஐரோப்பா கண்டத்தில் நடைபெறக்கூடிய முக்கியமான யுத்தமானது இந்த வருஷம் பூராவும் தொடர்ச்சியாக அடுத்த வருஷத்திலும் நடைபெறவேண்டும்.

இத்தகைய மகத்தான போருக்காக நேசநாடுகள் தங்களுடைய எல்லா மனித பலத்தையும் ஐச்வர்ய பலத்தையும் திரட்டி வருகிறார்கள். நிகழ்ச்சிகளை ஆரம்பிக்கும் சமயம் நெருங்கி வந்துவிட்டது. சர்வ ஜனங்களும் அமைதியுடன் அந்த சமயத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

---

## சிஸிலியை ஜயிப்பதற்கு சிறிதுகாலம் செல்லலாம்.

### தரைச் சண்டையை மும்மரமாய் நடத்தித்தான் ஆகவேண்டும்.

(டெய்லி எக்ஸ்பிரஸ் பத்திரிகை.)

சிஸிலியின்மேல் விமானங்கள் தாக்கி தற்காப்பு ஸ்தலங்களை நாசமாக்கி வருவதும், அந்தத் தீவின் பூகோள அமைப்பின் முக்யத்வமும் ஆகிய இவைகளை நோக்குங்கால் ஜெனரல் ஈஸன்ஹோவர் தாக்குவதற்கென குறித்துவைத்துள்ள நாடுகளின் லிஸ்ட்டில் சிஸிலி தான் அடுத்ததாகும் என்று லண்டன் தந்தி ஒன்று குறிப்பிடுகிறது.

நமது குண்டுபோடும் விமானங்கள் எல்லாம் அத்தீவைப் படையெடுத்து சைனியங்களை இறக்குவதற்குச் சுலபமாயிருக்கக்கூடிய மேற்குக் கரைகளின்மீதே குறியாக இருந்து குண்டுகள் போடுவதானது குறிக்கத்தக்க விஷயமாகலாம். அதே சமயத்தில் ரயிலிலுள்ள சாமான்களைப் படகுகளிலும், படகிலுள்ள சாமான்களை ரயில்களிலும் ஏற்றிறக்குமதி செய்யுமிடமான மெஸ்ஸினா ஜலசந்தியைத் தாக்குதல்கள் செய்வதாவது அந்த ஜலசந்தி இதாலியிலிருந்து சிஸிலிக்குச் சமான்கள் வருவதற்குத் தகுந்த முக்கியமான பிரதேசமாயிருப்பதாலேதான் நாம் நமது குண்டுகளை இன்னன்ன இடத்திற்கென்று பிரித்துப் பிரித்து அனுப்புவதானது நேசக்கட்சியனரின் படையெடுப்பு வகைகளில் ஒன்றாகும். அடுத்தபடி சிஸிலியைத் தாக்குவதென்று வைத்துக்கொள்வோம். நமது படைகள். செய்யவேண்டியதுதான் என்ன?

இது ஒரு பெரும் காரியமாகும். இதைச் செய்வது சிரமப்படும். சிஸிலி அநேகமாய் பெல்ஜியமும் அதன பிரதேசங்களும்போல் அவ்வளவு பெரியது. நீர்நிலைக்கு மேலானதும் மலைகளையும் குன்றுகளையும் உடையதுமாய் இருக்கிறது. மேற்குக்கடற்கரைதான் தாக்குதலுக்கு சுலபமானது. நேசதேச தளங்களுக்கு அருகாமையிலுள்ளதையும் மலைகளின்றி சமமான பிரதேசமாயும் இருக்கிறதாலும் அங்கு மார்ஸிலா டிரபானி என்ற 2 நல்ல துறைமுகங்கள் தான் இருக்கின்றன. அவைகளிலிருந்து ஏதாவதொன்றில் நம் சைனியங்கள் இறங்கவேண்டும். அவைகள் தான் இதாலியக்கடற்கரைக்குத் தூரமாயிருப்பவைகள்.

கீழ்த்தரை விமானந்தாங்கிகளும், பலபெரிய பிரங்கிகளும் கொண்ட கோட்டைகளை அத்தீவில் ஜெர்மன் தொழிலாளிகள் எழுப்பியிருக்கின்றனர். ஜெர்மன் விமானப்படையும், 4 முதல் 6 வரை இதாலியத் துருப்பு பகுதிகளும் ஆக 1,00,000 சைனியங்கள் கொண்ட பெரும் படையொன்று அத்தீவில் இருக்கிறது. நன்றாக சண்டையிடுவதற்கு பயிற்சியளிக்கப் பட்டிருக்கிற அந்தசேனை முதலில் நம் சைனியங்கள் இறங்குவதைத் தடுப்பதற்குப் போதுமான பெரும்படையாகத்தான் இருக்கிறது. எதிரி விமான பலம் சேர்த்திருக்கிறான் என்பதில் சந்தேகமில்லை.

படையெடுத்து தாக்குதலில் ஜயம் ஏற்படுவது 2 விஷயங்களைப் பொருத்திருக்கிறது. (1) பிரங்கிகளையும் விமான நிலையங்களையும், கடல் படைகளாலும் விமான படைகளாலும் தகர்த்தெரிவது. (2) மெஸ்ஸினா ஜலசந்தி மூலமாய் ஸப்ளைகள் வராமல் செய்வது.

சாதாரணமாகச் சொன்னாலும் கடல் பலத்தாலும் விமானப்பலத்தாலும் மட்டும் சிஸிலியை ஜெயிப்பதென்பது அசாத்தியமே. தரைமேல் ஒரு பெரும் போர் நடத்தத்தான் வேண்டியிருக்கும் என்று தோன்றுகிறது. முதல் சிலசமயங்களில் நாம் நம் சைனியங்களையும் தளவாடங்களையும் அத்தீவில் இறக்கும்போது 100-க்கு 50 வீதம் நமக்கு சைனியங்கள் கொண்டுசெல்லும்பொழுது நஷ்டம் ஏற்படலாம் என்று சில மேதாவிகள் கணக்கெடுத்திருக்கின்றனர். சைனியங்கள் கொண்டு செல்லும் எதிரியின் விமானங்களை தரைமீதே நாசப்படுத்த வேண்டியது நமது தாக்குதல்களுக்கு மிகவும் முக்கியமானதாகும். அதற்கு போதிய நாட்களாகும், ஆகவேதான் நாம் தாக்குவதற்கு சிறிது நாட்களாவது ஆகும்.

## ஹூனனில் ஜப்பானியர் அடைந்த தோல்வி.

கொடும் மலைக் கூட்டங்கள் நிறைந்த யாங்ட்ஸீக்குத் தெற்கிலேபோய் அந்த வழியாய் சங்கிங்கின்மேல் படையெடுப்பது அசாத்தியமான காரியமாகும் என்று ஜூன் மாதம் 1-ம் தேதி டோக்கியோ ரேடியோ சொல்லிற்று. ஹான் சமவெளி வழியாய் ஷூவான் சமவெளியிலிறங்கி ஹான்சங் கணவாய் வழியாகச் சென்று ஷென்ஸி எல்லையை அடைவதுதான் சுலபமான வழியாகும். ஆனால் தாக்குதல் செய்துவரும் யாங்ட்ஸிக்கு தெற்குப் பிரதேசங்களில் நல்ல இலக்குகள் இருக்கின்றன. அவைகளை நோக்கி படையெடுத்துவந்த எதிரிகள் முடிவில் தோல்வியுற்றனர். ராஜீய முக்கியத்துவமும் அப்படையெடுப்பில் உள்ளது. இந்த ஜப்பானியத் தாக்குதலாலும் ஷைகெமிட்சு என்பவரை ஜப்பான் வெளிதேச மந்திரியாக நியமித்ததும் ஏககாலத்தில் நடந்தது. இவ்வாறு நடந்ததானது சுங்கிங் படைகளை "புது சீன முறைக்கு" சேர்த்துக்கொள்ள முயலுவதற்கும், பேங்பிங் ஹூசன் தன்னுடைய 70,000 படைகளுடன் சரணடைவதற்கும், நேசதேச யுத்த தந்திரங்களான ஐரோப்பாவிலே முதல்" என்பதை வெளிப்படுத்தி சுங்கிங் படைகளை பணியவைக்கவுமாகும்.

ஜப்பானியர்கள் செஞ்சேனையை தூரக்கிழக்கிலே எதிர்த்து நிற்க ருஷ்யாவில் நாடுகளை காலி செய்வது முதலிய பல காரியங்கள் செய்ததுபோல, பரிக்ஷார்த்தமாகவே இத்தாக்குதல் செய்யப்பட்டது. இத்துடன் தாக்குதலைப்பற்றிய பிரசாரம் ஒன்றும், அநேகமாய் சைன பாஷையிலேயே அதன்பின் நடந்தது. டோக்கியோ ரேடியோவில் மே மாதம் 14-ம் தேதி சைன பாஷையில், சுங்கிங் ஜனங்களின் மனோதைரியம் நாளுக்குநாள் குறைந்துவிட்டது. தென்மேற்கிலே கொள்ளைக் கூட்டத்தினர் அதிகமாய் வேலை செய்து வருகின்றனர். ஷூவான் ராணுவத்திற்கும் சுங்கிங் ராணுவத்திற்குமிடையே பிளவு ஏற்பட்டுவிட்டது. ஷூவான், ஸிகாங், யூனன் ராணுவ அதிகாரிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து சியாங்கிற்கு எதிரிடையாக ஒரு கட்சி கூட்டியிருக்கின்றனர். சங்கிங் மக்களுக்கும், யூனனிலுள்ள பொதுவுடைமை கட்சிக்கும் உள்ள சம்பந்தத்தில் கலவரம் ஏற்பட்டுவிட்டது என்றெல்லாம் வெளியிடப்பட்டது. இத்தகைய பிரசாரங்கள் யுத்த அரங்கங்களிலும் செய்யப்பட்டன. சங்கிங் துருப்புகளிடையே இந்த பிரசாரக் கோஷ்டியினர் துண்டுப் பிரசுரங்களையெல்லாம் விடுத்தனர். விமானங்களும் இவ்வேலைகளுக்கே உபயோகப்படுத்தப்பட்டன.

மே மாதம் 19-ந் தேதி மற்றொரு பிரசாரம் சைன பாஷையிலேயே, பேங் பிங் ஹூனின் வெளியீடு உயர்ந்த சீன அரசாங்க அதிகாரிகளிடையே பயத்தை உண்டாக்கிவிட்டது என்றும், முந்திய கும்மிஞ்சன், டங்பெய் துருப்புகள் சியாங்கிற்கு எதிரியாய்க் கிளம்புவார்கள் என்றும் குறிப்பாய் வெளிப்படுத்தியும் சொல்லப்பட்டது.

டோக்கியோ ரேடியோக்களில் ஜூன் மாதம் 3-ம் தேதி, ராணுவ மேற்பார்வையாளர்கள் கூறிவந்ததை ஆங்கிலத்திலும், "உலகத்தின் மனக்கருத்தை" அதாவது, நாங்கிங், பிரிடன்மேலும், அமெரிக்காமேலும் யுத்தம் துவக்கிவிட்டதினால் சங்கிங் எதிர்த்து நிற்க வேண்டியதில்லை என்றும்,ஜப்பான் புது சீனமுறையை அனுசரிக்கிறது என்றும்,இதனாலேதான் ஜப்பானியத் துருப்புகள் வேலை செய்தன என்றும் சொல்லப்பட்டது.

இம்மாதிரியெல்லாம் டோக்கியோவில் செய்யப்பட்ட பிரசாரங்களுக்குத் தகுந்த முறையிலே பதிலளிக்கப்பட்டது. அதனால் ஜப்பானியத் துருப்புகள் தாக்குதல் ஆரம்பிப்பதற்கு முன்பு எங்கு இருந்தார்களோ அங்கேயே இருக்கின்றன. "ஸெப்டம்பர் மாதத்திற்கு முன்னேயே" செய்துமுடித்துவிடவேண்டுமென நினைத்த "சமாதானக் கொள்கை" முன்னாலே அழிக்கப்பட்டுவிட்டது. அநேகமாய் ஹூனனில் "அரிசி மூட்டைகள்" எல்லாம் சங்கிங் இடமே இருக்கின்றன.

# ஜெனரல் மாக் ஆர்தரின் ஒரு வருஷ நடவடிக்கை.

## பஸிபிக் யுத்தத்தில் முக்கியமான லாபங்கள்.

(டைம்ஸ் பத்திரிகை).

ஒரு வருஷத்துக்குமுன் ஜெனரல் மாக் ஆர்தர் ஆஸ்திரேலியாவுக்கு வந்தபொழுது ஆஸ்திரேலியாவை எவ்விதம் தற்காப்பு செய்வதென்ற பிரச்னை அவர் முன் நின்றது. அப்பொழுது போட்டிருந்த திட்டப்படி நியூகினியாவையும் ஆஸ்திரேலியாவுக்கு வடக்கிலுமுள்ள தீவுகளையும், கூயின்ஸ்லாந்து, வடக்குப் பிரதேசங்கள் முதலியவற்றை ஆஸ்திரேலியா இழந்துவிட்டு, பிரிஸ்பேனிலிருந்து மேற்கு முகமாக, பிரிஸ்பென் கோடு என்று சொல்லும் கோடு நெடுக ஒரு அரணைக் கட்டுவது என்று முடிவு செய்யப்பட்டிருந்தது. அமெரிக்காவுக்கும் ஆஸ்திரேலியாவுக்குமுள்ள போக்குவரவு மார்க்கங்களைத் துண்டித்து விட்டு ஆஸ்திரேலியா முன்னேற்ற நடவடிக்கைகளுக்குத் தளமாக உபயோகப்படாதபடி செய்துவிடுவதும் தான் ஜப்பானின் யுத்த தந்திரமாகயிருந்தது. அப்பொழுது நியூகினியாவில் கையளவு ஆஸ்திரேலியப் படைகளும் உள்நாட்டுத் துருப்புகளும் தானிருந்தன. மோர்ஸ்பி துறைமுகத்தி லுள்ள விமானத்தளம் போக்குவரவு விமானங்களுக்கு எண்ணெய் நிறப்பும் ஸ்தலமாக மட்டும்தான் உபயோகப்பட்டது.

ஆகிலும் ஆஸ்திரேலியாவுக்காக நடைபெறப்போகும் யுத்தத்தை ஆஸ்திரேலியா பூமியிலில்லாமல் நியூகினியாவில்தான் நடத்த வேண்டுமென்று ஜெனரல் மாக் ஆர்தர் தீர்மானம் செய்தார். முதலில் தள சீர்திருத்த வேலையில் கவனம் செலுத்தினர். அமெரிக்க, ஆஸ்திரேலிய இஞ்ஜினியர்களும் அமெரிக்க நீக்ரோக்களும் பாபுவாவின் தொழிலாளர்களும் நவீன யந்திர சாதனங்களை உபயோகித்து வேலைசெய்ய ஆரம்பித்தார்கள். ஒரு வருஷத்துக்குள்ளாகவே நியூகினியாவில் அநேக ஆயிரக்கணக்கான துருப்புகள் குவிந்துவிட்டன. நூற்றுக்கணக்கான விமானங்கள் பறந்து செல்லக்கூடிய ஏராளமான விமானக் கூடங்களும் கட்டப்பட்டுவிட்டன. மோர்ஸ்பி துறைமுகத்தின் பரிமாணமும் பன்மடங்காக அதிகரிக்கப்பட்டது. இது ஒரு மகத்தான சீர்திருத்தம். இதை சிரமப்பட்டு பூர்த்திசெய்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு விசேஷ கௌரவமளிக்க வேண்டுமென்றுலும் இதைத் திட்டம்போட்ட சேனாதிபதியின் புத்தி கூர்மையையும் ஆர்வத்தையும் நாம் பாராட்டவேண்டியதுதான்.

### ஜப்பானுடைய நோக்கங்கள்.

ஜப்பானியர் தெற்கு நோக்கி முன்னேறுவதை சில முக்கியமான சண்டைகள் செய்து நாம் தேக்கிவிட்டோம். மார்ச்சு மாத ஆரம்பத்தில் ஹூவான் வளைகுடாவில் யுத்தக் கப்பல்களும் துருப்பேற்றிருந்த கப்பல்களுமுள்ள ஒரு கப்பல் கூட்டத்தை ஆஸ்திரேலியா விமானங்கள் பலமாகத் தாக்கியதிலிருந்து ஜப்பானின் முன்னேற்றம் இரண்டுமாத காலம் தடைப்பட்டது. ஜூன் மாத ஆரம்பத்தில், மோர்ஸ்பி துறைமுகத்தைப் பிடிப்பதற்கும் யார்க் முனை தீபகற்பத்தில் தளங்களை ஏற்படுத்துவதற்கும் நியூகாலிடோனியாவைச் சாத்தியமானுல் கைப்பற்றுவதற்கும் எண்ணம்கொண்டு ஒரு பெரிய ஜப்பானியக் கடற்படை தயாராகயிருந்தபொழுது கடற்கரையிலிருந்து புறப்பட்ட அமெரிக்க வெடி விமானங்களும் விமானம் தாக்கிகளிலிருந்து புறப்பட்ட வெடி விமானங்களும் ஜப்பானின் கடற்படையை பவளக்கடல் யுத்தத்தில் சிதற அடித்துவிட்டன.

ஆகிலும் ஜப்பானியர்கள் தங்களுடைய லக்ஷியத்தைக் கைவிடவில்லை. நியூ கினியா பூராவையும் பிடித்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் ஜூலை மாதம் 21-ம் தேதியன்று ஜப்பானியப் படைகள் கோனுவிலிறங்கி உள்நாட்டை நோக்கிச் சென்றன. பாபுவாவின் தென் கிழக்கு மூலையிலிருக்கும் கேந்திர ஸ்தலத்தைப் பிடிப்பதற்காக ஆகஸ்டு மாதம் 26-ம் தேதியன்று மில்னி விரிகுடாவில் மற்றும் சில ஜப்பானியத் துருப்புகள் இறங்கின. ஆனுல் மில்னி விரிகுடாவை அடைவதில் நாம் முன்னதாகவே சென்ருேம். நம்மிடம் தேர்ச்சி பெற்ற துருப்புகள் அங்கிருந்தன. நாம் இறங்குவதற்கு வசதியான பிரதேசங்களும் விமானங்களின் உதவியும் நம்மிடமிருந்தன. மேலும் இங்கு வந்த ஜப்பானியப் படை பலஹீனமானது. இங்கு அனுப்புவதாக உத்தேசித்திருந்த பலமுள்ள ஜப்பானியப் படையானது தெற்கு ஸால்மன்ஸில் ஆகஸ்டு மாதம் 7-ம் தேதி இறங்கிய நமது படைகளை எதிர்க்க அனுப்பப்பட்டுவிட்டது.

மில்னி விரிகுடா யுத்தத்தில் ஜப்பானியர்களுக்குப் பூர்ணமான தோல்வி கிடைத்தது. இந்தத் தோல்விக்குப் பின்னும் ஜப்பானியர்கள் தரை மார்க்கமாக மோர்ஸ்பி துறைமுகத்தை நோக்கிச் செல்லும் திட்டத்தை நிறுத்திவிடவில்லை. மோர்ஸ்பிக்கு 32 மைலிலுள்ள ஒரு ஸ்தானத்தை அவர்களடைந்தார்கள். சில வாரங்களுக்குப்பின் அவர்கள் பின் வாங்கும்படி நேரிட்டது. சாமான் ஸப்ளை கஷ்டங்களும், துருப்புகளின் சோர்வும், நமது விமான ஆதிக்கமும்தான் ஜப்பானின் பின்வாங்குதலுக்குக் காரணம், அவர்கள் வடக்கு சமுத்திரக் கரைக்குச்

சென்றுர்கள். அங்கும் தென்கிழக்கிலிருந்து அமெரிக்கத் துருப்புகளிடமிருந்து பயம் ஏற்பட்டது. துருப்புகளுக்கு ஸப்ளைகள் விமானமூலம் வந்துகொண்டிருந்தன. காலிசெய்துவிட்டு தப்பித்து ஓடமுடியாமல் லெப்டினெண்ட் ஜெனரல் டாமிடாரோ ஹாரையின் துருப்புகள் நிர்மூலமாக்கப்பட்டன.

## சிறந்த போர்

சமீப காலத்தில் வடகிழக்கு நியூ கினியாவிலுள்ள நமது முக்கியமான முன்னணி தளமான வாவைப் பிடித்துக்கொள்ள ஜப்பானியர்கள் செய்த முயற்சியை நாம் வெற்றிகரமாகத் தடுத்துவிட்டோம். லே பிரதேசத்திலிருக்கும் துருப்புகளுக்கு ஸப்ளைகளையும் உதவிப் படைகளையும் கொண்டுபோவதைத் தடைசெய்யும் போரில் நமக்கு மகத்தான வெற்றி கிடைத்து. இந்த யுத்தத்திலேயே இது சிறந்த போரென்று சொல்லலாம்.

யுத்த ஆரம்பத்தில் ஜப்பானுக்கு ஏராளமான வெற்றிகள் கிடைத்ததற்கு, ஜப்பானுடைய விமானப் படையின் மேன்மையும் தரைப்படை, கடற்படையுடன் விமானப்படை ஒத்துழைத்ததும் காரணமாகும். ஜப்பானுடைய விமானங்கள் பெர்ல் துறைமுகத்தைத் தாக்கின, பிரின்ஸ் ஆப்வேல்ஸ், ரிபல்ஸ், கார்ன்வால், டார்ஸட்ஷைர், ஹேர்மிஸ் கப்பல்களை மூழ்கடித்தன. ஜப்பானிய துணைக்காவல் கப்பற்படையும் தரைப்படைகளும் விமானப்படையின் ரக்ஷணையுடன் யுத்தம் செய்தன. இதற்கு மாருக ஜப்பானுடைய தோல்விகளுக்கு விமானப் படையின் ரக்ஷணைக் குறைவுதான் முக்கிய காரணமாகும். ஜெனரல் மர்க் ஆர்தரின் யுத்த தந்திரப்படி வெடி விமானங்களை முற்போக்காக நாம் அனுப்பிவிடுகிரேம். ஒரு வருஷத்துக்கு முன் நமது பறக்கும் கோட்டைகள் ஆஸ்திரேலியா கண்டத்திலுள்ள விமான தளங்களிலிருந்து புறப்பட்டு வேலைசெய்து வந்தன. நடுவில் மோர்ஸ்பி துறைமுகத்தில் அவைகள் எண்ணெய் நிரப்பிக்கொண்டாலும் ரபாலுக்கு செல்லவேண்டியிருந்தது. ராபாலரினது லண்டனிலிருந்து ரோமுக்கு இருக்கும் தூரம் உள்ளது. இதற்குப்பிறகு விமானங்கள் மோர்ஸ்பி துறைமுக தளத்திலிருந்து வேலை செய்ய ஆரம்பித்தன.

பாபுவாவில் நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டதின் நோக்கம் அதன் வடக்குக் கடற்கரையில் விமான தளங்களை ஏற்படுத்தி நமது விமானப்படையின் நடவடிக்கைகளை விஸ்தரிப்பதுதான். ஒவ்வொரு நிகழ்ச்சியின் முடிவிலும் நேசதேச விமானப் படையின் வலிமை இரட்டித்துவிட்டது. இந்தப் பிராந்தியத்தில் விமானங்களின் சங்கியையும் இரட்டித்தது. பாபுவா நடவடிக்கைகளிலிருந்து வெடி விமானங்கள் குண்டு வீசுவதையும் பிரதேசங்களை நொருக்குவதையும் துருப்புகளை ஏற்றிச் செல்லுவதையும் சில சமயங்களில் சப்ளைகளைத் தள்ளிவிடுவதையும் தவிர இதர அலுவல்களையும் விமானங்கள் செய்யக்கூடுமென்று தெரிந்துகொண்டோம். நம்மிடமிருக்கும் சிறிய விமானப்படையின் உதவி கொண்டு துருப்புகள் எல்லாவற்றையும் ஏற்றிச் செல்லவும் அவைகளுக்குத் தினந்தோறும் வாரங்கள்தோறும் ஆகார வசதிகளையும் முஸ்தீப்புகளையும் அனுப்பலாமென்றும் நாம் அறிந்துகொண்டோம்.

## மற்ருெரு மாகிேனை அரண்.

ஸாலமன்ஸ், மத்திய பஸிபிக் பிராந்தியம், மிட்வே தீவுகள், பாவுவா முதலிய இடங்களில் ஜப்பானியர்களின் முன்னேற்றத்துக்குத் தடை ஏற்பட்டுவிட்டதால், ஆஸ்திரேலியாவைத் துண்டாடிவிட வேண்டுமென்று அவர்கள் போட்டிருந்த திட்டத்தை தாத்காலிகமாக அவர்கள் நிராகரித்து விட்டார்கள். இதற்கு பதிலாக, டிமார் தீவிலிருந்து, அராபுராக் கடலிலுள்ள தீவுகள் வழியாகவும், நியூகினியாவின் வடக்குக் கடற்கரைப் பிரதேச மார்க்கமாகவும், நியூ பிரிடன், வடக்கு ஸாலமன்ஸ் வழியாகவும் சென்று பிறகு வடக்கு முகமாக ஜப்பானின் அதிகாரத்துக் குட்பட்ட தீவுகளில் முடிவடையும் படியான மாகினே அரண் போன்ற ஒரு பலமான அரணை அமைக்க ஜப்பானியர்கள் ஏராளமான முயற்சி செய்து வருகிருர்கள். நமது அரணைப் பிளப்பதற்கு ஜப்பானுக்கு எவ்வளவு கஷ்டமாக இருந்ததோ அதுபோல இந்த அரணை நாம் பிளப்பதும் சிரம சாத்தியமாகயிருக்கும். இரவு பகலாக இறங்குமிடங்களையும், விமான தளங்களையும், வெடி மருந்துசாலைகளையும், அமைப்பதிலும், துறைமுகங்களை விஸ்தரிப்பதிலும், படை பலத்தை அதிகரிப்பதிலும், நிரந்தரமான தற்காப்புகளைக் கட்டுவதிலும் ஜப்பானியர்கள் கவனம் செலுத்தி வருகிருர்கள். இம்மாதிரியாக கவசங்கள் உள்ள அரண்கள் தற்காப்புக்கும் முன்னேற்ற யுத்தத்துக்கும் அதிக வசதிகளையளிக்கும். நாட்கள் செல்லச் செல்ல நேசநாடுகளுக்கு அதிக சிரமம் ஏற்படக்கூடும்.

இன்று ஜப்பானியர்களின் நிலைமை மிகவும் வலிமையுள்ளது. அவர்களுக்கு அவசியமான தாதுப் பொருள்களெல்லாம் அவர்களுக்குக் கிடைத்துவிடுகின்றன. அவர்கள் அரண்களமைக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிருர்கள். அவர்களிடம் யுத்த தளத்தில் பயிற்சிபெற்ற ஒரு வலிமையுள்ள சேனையிருக்கிறது. இச்சமயம் ஒரு இடத்திலும் ஜப்பானியச் சேனை யுத்

தம் செய்யவில்லை. ஒவ்வொரு ஜப்பானிய சிப்பாயினுடையவும் மாலுமியினுடையவும் தேசாபிமானமும் திடமும் ஜப்பானுக்கு இன்றியமையாதது. ஆசியா கண்டத்தில் ஏராளமான உழைப்பாளிகளான தொழிலாளர்கள் ஜப்பானின் ஆதிக்கத்துக்குட்பட்டிருக்கிறார்கள். ஆக்கிரமிப்பு நாடுகளில் அமுல் நடத்துவதற்கு முதல்தரமான துருப்புகளை அனுப்பவேண்டிய அவசியமே ஜப்பானுக்கு இல்லை. ஆகையால் எல்லாத் துருப்புகளையும் யுத்த அரங்கத்தில் ஜப்பான் உபயோகப்படுத்தலாம். ஜப்பானுடைய விமான தளங்கள் சங்கிலிக்கோர்வை போலிருப்பதால் தொழிற்சாலையைவிட்டுக் கிளம்பும் விமானம் ஒரு வாரத்துக்குள்ளாகவே பஸிபிக் பிராந்தியத்துக்குச் சென்றுவிடும். வெடி விமானக்கூட்டமும் மஞ்சூரியாவிலிருந்து பர்மாவுக்கு ஒரு வாரத்துக்குள்ளாகவே சென்றுவிடுகிறது.

### வெற்றியடைவதற்கு மார்க்கம்.

சில அம்சங்களில் ஜப்பானியர்கள் வலிமையுள்ளவர்களென்றாலும் சில விஷயங்களில் அவர்கள் பலஹீனமுள்ளவர்கள். அவர்களுடைய கவசங்களில் சில ஓட்டைகளிருக்கின்றன. முதலாவது பஸிபிக் பிராந்தியத்திலுள்ள படைகளைக் காப்பாற்றுவதற்கு ஜப்பானிடம் போதுமான சாமான்களில்லை. இரண்டாவது, இதுதான் முக்கியமானது. ஜப்பானுடைய விமானப்படையின் சாதுர்யம் நமது விமானப்படையுடன் ஒப்பிடமுடியாது. நாம் புதிய ரக விமானங்களை உற்பத்தி செய்யலாம். ஜப்பான் கட்டுவதைப்போல் பத்து மடங்கு விமானங்களை நாம் கட்டிவிடலாம். நாம் சிலாக்கியமான விமானிகளையும் தயாரித்து விடலாம்.

எதிரியின் பலஹீனத்தை நாம் எவ்விதம் பயன் படுத்திக்கொள்ளுவது. இதற்கு விடையை ஜப்பானியர்கள் ரொம்பவும் நஷ்டமடைந்துதான் அறிந்துகொள்ளவேண்டும். இந்தக் கேள்விக்கு பதிலுரையை நிபுணர்களும் தளகர்த்தர்களும்தான் விடுக்கவேண்டும். பாபுவா யுத்தத்தின் படிப் பினைகளைப்பற்றி வியாக்கியானம் சொல்லுமாறு மாக் ஆர்தரைச் சிலர் வேண்டிக்கொண்டபொழுது அவர் சொன்னதாவது. "வெற்றி கிடைக்கவேண்டுமானால் புதிதான, விரிவான யுத்த தந்திரங்கள் கையாளப்பட வேண்டும். விமானப்படையும், தரைப்படையும், கடற்படையும் ஒத்துழைத்ததால்தான் வேகமாக பலமான நடவடிக்கைகளைச் செய்வதற்கு வசதியேற்பட்டது. இல்விதமாக புதிய முறைகளை ஏற்றுக்கொண்டால் ஒவ்வொரு தீவாக முன்னேறும் அவசியம் ஏற்படாது.'

சென்ற வருஷத்தில தென்மேற்கு பஸிபிக்கில் தாம் எதிரியைச் சமாளித்துத் தடுத்து விட்டோம். தெற்கு ஸாலமன்ஸிலும் பாபுவாவிலும் நாம் சில பாகங்களைக் கைப்பற்றியதென்பது தற்காப்பை பலப்படுத்த முன்னேறி யுத்தம் செய்ததும், நமது தற்காப்பு அரண்களை பலப்படுத்துவதற்கும், அவைகளுக்குத் தெற்கேயுள்ள போக்குவரவு மார்க்கங்களை ரக்ஷிப்பதற்கும் நடைபெற்ற நிகழ்ச்சிகளாகும். ஜெனரல் மாக் ஆர்தர் வசமுள்ள துருப்புகளும் தெற்கு பஸிபிக்கிலுள்ள துருப்புகளும் ஜப்பானிய முன்னேற்றத்தைத் தடுத்துவிட்டன. இந்த சமாளிப்பு யுத்தம் நிலைபெற்றிருப்பது இரண்டு அம்சங்களைப் பொருத்ததாகும். இதை எதிர்க்க எதிரி திரட்டும் படைகளையும், இந்தப் பிராந்தியத்திற்கு அனுப்பப்படும் நமது உதவியையும் பொருத்ததாகும். சேனாதிபதியும் தளகர்த்தர்களும் சிறிய படை பலத்துடன் இவ்வளவு தூரம் சமாளித்து நின்றார்களென்றால், உலகத்தின் இந்தப் பிராந்தியத்தில் நேச நாடுகளின் பூரா படை பலத்தையும் ஒருங்கு சேர்த்து உபயோகப்படுத்தும் பொழுது மகத்தான சம்பவங்கள் நடைபெறுமென்பதில் ஐயமில்லை.

---

## உலக முன்னேற்றத்துக்கு பிரிடிஷாரின் பேருதவி.

(லேப் என்பவர்).

"யுத்தத்துக்குப்பின் ஏற்படும் நிலைமையைப்பற்றி தற்போதிருக்கும் குழப்பமான அபிப்பிராயங்களை அமெரிக்கா களைந்துவிடாதபோனால், சமான காலத்தில் பிரிடிஷாரின் செல்வாக்குத்தான் முக்கியமாக ஓங்கி நிற்கும்.

தாதுப்பொருள்களிலும் மனித பலத்திலும் ருஷ்யாவுடன் பிரிடன் போட்டிபோட முடியாதபோனாலும் புத்தி விசாலத்தில் ருஷ்யாவையும் மற்ற தேசங்களையும்விட பிரிடன் மேன்மையானது.

யுத்தத்தில் பிரிடன் செய்த பேருதவிகளில் ஒன்று, வெற்றி கிடைத்தபின் அவசியமான சில உயர்வான நோக்கங்களை வெளிப்பட்டதென்பது. இவைகளுள் முக்கியமானது கலா விஞ்ஞான சம்பந்தமானது. அதாவது சாஸ்திர முறைகளை உபயோகப்படுத்தும் முறைகள்.

சென்ற சில வருஷங்களில் பிரிடிஷாரின் புதிய கற்பனைகளும் யந்திர சாதனங்களின் அபிவிருத்தியும் வியப்படையும்படி அதிகரித்திருக்கின்றன. யுத்த ஆரம்பத்தில் ஜெர்மானியர்கள் பிரிடிஷ் சமுத்திரங்களில் காந்தக் கண்ணிகளைப் பாவினார்கள். ஆனால் வெகு சீக்கிரமாக ஒரு யந்திர சாதனத்தைக் கண்டுபிடித்து காந்தக் கண்ணிகளிடமிருந்து ஏற்படும் அபாயத்தை பிரிடன் நிவர்த்திசெய்துவிட்டது.

சண்டைபோடும் விமானங்களில் பிரிடிஷ் ஸ்பிட்பையர் விமானம் எல்லாவற்றையும்விட உயர்வானது. உலகத்திலேயே ரோல்ஸ் ராய்ஸ் எஞ்சின்கள் உற்பத்தி செய்யும் வேலையில் பிரிடனில்தான் அதிகமாக நடைபெறுகிறது. பிரிடிஷார்கள் தாமதித்து வெடிக்கும் வெடிகுண்டுகளையும், சுரங்க வெடிகளைக் கண்டுபிடிக்கும் கருவிகளையும், உயிரைக் காப்பாற்றும் சாதனங்களையும், படகுகளில் செல்லும்பொழுது சமுத்திர ஜலத்தை வடிகட்டி சுத்த ஜலம் உண்டாக்கும் வடிகட்டிகளையும், இன்னும் அநேக சாமான்களையும் புதிதாக உற்பத்தி செய்திருக்கிறார்கள்.

வெடிகுண்டுகள் செய்வதிலும் பிரிடிஷார் அதிக முன்னேற்றமடைந்திருக்கிறார்கள் மிகவும் உயர்வான உற்பத்தியாதெனில் ரேடியோ லொகேடர் என்னும் கருவி. இதன் உதவியால் தூரதிருஷ்டிக் கண்ணாடிகளின் திருஷ்டி கோசரத்துக்கப்பால் வெகு தூரத்தில் வரும் கப்பல்களையும், விமானங்களையும் மூடுபனியிலும் மேகங்கள் கனமாகயிருக்கும் பொழுதும் கண்டுபிடித்துவிடலாம்.

ரேடியோ லொகேடரைக் கண்டுபிடித்ததில் அமெரிக்காவும் ஒரு பங்கு எடுத்துக் கொண்டது. ஆகிலும் இந்த வேலையை ஆரம்பித்து நடத்தியது பிரிடன்தான். சாஸ்திர முறைகளை யந்திர சாதனத்துக்கு அன்வயப்படுத்தியதோடு பிரிடனுடைய பேருதவி நின்றுவிடவில்லை. நேசதேசத்தார்களின் யுத்த தந்திரத்தை நிறுவுவதிலும் பிரிடன் விசேஷப் பங்கு எடுத்துக்கொண்டது. இதை விர ராஜீய விஷயங்களிலும் பலவிதமான அபிப்பிராயங்களை பிரிடன் வெளியிட்டிருக்கிறது. அது ருஷ்யாவுடன் இருபது வருஷ ஒப்பந்தம் செய்து முடித்துவிட்டது. ஐரோப்பாவில் நடைபெறவிருக்கும் எவ்வித திட்டங்களுக்கும் இது அடிப்படையானது.

"அக்கிரமம் செய்யும் வல்லரசுகளை அழிப்பதற்காக இந்த யுத்தம் நடைபெறுகிறது" என்று சொல்லும் விஷயத்தில் மிஸ்ட்டர் சர்ச்சில் நேசதேசங்களின் ஒரு முக்கியமான பிரதிநிதியாவர். காரியாம்சையிலும் வருங்கால உலக உத்தாரணத்துக்காக ஐரோப்பாவிலும், ஆசியாவிலும் சபைகளை ஏற்படுத்த வேண்டுமென்று அவர் யோசனைகூறியுள்ளார்.

மேலும் வருங்காலப்போக்கைப் பாதிக்கக்கூடிய அநேகப் பொருளாதார அபிப்பிராயங்களையும் பிரிடன் வெளியிட்டிருக்கிறது. ஜனன காலம் முதல் மரண பரியந்தம் பொதுஜன வாழ்க்கையின் க்ஷேமத்தை சாஸ்திர முறையில் ஏற்பாடு செய்திருக்கும் பெவெரிஜ் திட்டமும் பிரிடிஷாருடைய அரிய சேவையாகும். அமெரிக்காவில் மேற்படி திட்டம் ராஜீய முறையில் ஏற்படுத்தியிருந்ததால் அது சின்னாபின்னமாகிவிட்டது. தொழிலாளர்களுக்கு அரசாங்கத்தில் ஒரு ஸ்தானம் அளித்ததும் பிரிடன்தான். பிரிடஷ் தொழிலாளர்களும் சில முக்கியமான தொழில் ஸ்தாபனங்களில் உற்சாகமூட்டும் முறைகளையும் அனுஷ்டித்துவருகிறார்கள். அதாவது அதிக உற்பத்தி செய்கிறவர்களுக்கு அதிக ஊதியம் கொடுப்பது என்பது. கடைசியாக, பிரிடனின் பொருளாதார நிபுணரான கீன்ஸ் பிரபு சர்வதேசக் கொள்முதல் முறைகளை ஒழுங்குபடுத்துவதற்காகத் திட்டம் போட்டிருக்கிறார். இதன் மூலம் யுத்தத்தில் கஷ்டப்பட்ட நாடுகளெல்லாம் விலைவாசியின் அதிக உயர்வில்லாமல் முன்னேற்றமடைய சாதகம் ஏற்படும்.

---

## இதாலி யுத்தத்தில் ஈடுபட்ட மூன்று வருஷங்கள் முடிவு விழா.

"ஸ்திரீக்கு பிள்ளைகளைப்பெறுவது அவசியம்போல் மனிதனுக்கு யுத்தம் செய்வது அவசியம்."
"இதாலியர்கள் யுத்த வீரர்களல்ல என்ற வீண்பேச்சு அகற்றப்படவேண்டும்".

முஸோலினியின் சொற்பொழிவுகள்.

### முஸோலினியின் மனோராஜ்யம்.

1940-ம் வருஷம் ஜூன் மாதம் 10-ம் தேதியன்று இதாலி யுத்தத்திலிறங்கியபொழுது யுத்தம் சீக்கிரம் முடிவடையும் என்றும், சீக்கிரம் வெற்றிபெற்றுவிடலாமென்றும் இதாலியர்கள் நம்பியிருந்தார்கள். அப்பொழுது தாக்குவதற்கு நல்ல சமயம். பிரான்ஸ் வீழ்ச்சிபெற்றிருந்தது. மத்தியதரைக்கடலில் பிரிடிஷ் கடற்படையின் நிலைமை அபாயகரமாகயிருந்தது. ஆபிரிக்கா கண்டத்திற்குச் சென்று இதாலி எகிப்தைக் கைப்பற்றுவதற்கும் ஸோமாலிலாந்திலிருந்து பிரிஷாரை அப்புறப்படுத்தவும்வசதியிருந்தது. அல்பேனியாவிலும் எட்ரியாடிக் கடற்கரையிலும் இதாலி பலமாக ஊன்றியிருந்ததால் அது கிரீஸையும் அதற்குக் கிழக்கேயுள்ள தேசங்களையும் எளிதில் பிடித்திருக்கலாம்.

## தோற்றம் கனவாகிவிட்டது.

### வீண் பீத்தல்.

ஹைபா, ஸீவா, கெனியா, ஸுடான், பிரிடிஷ் ஸோமாலிலாந்தில் இதாலிக்கு வெற்றி கிடைத்ததிலிருந்து பிரிடனுக்கு இகழ்ச்சி ஏற்பட்டுவிட்டது.

ரோம் ரேடியோ, 12—8—40.

ஏடனை இதாலி ஆக்கிரமித்துவிட்டதால் கிழக்கு சாம்ராஜ்யத்திலிருந்து பிரிடன் துண்டிக்கப்பட்டுவிட்டது.

ரோம் ரேடியோ, 12—8—40.

பிரிடனுடைய கடல் தாண்டியிருக்கும் சாம்ராஜ்யத்தை முஸோலினி தாக்க ஆரம்பித்துவிட்டதால் அவன் பிரிடிஷாரின் கௌரவத்தை அழிக்க விரும்புகிறான். மத்தியதரைக் கடலுக்கும் பூமத்திய ரேகைக்கும் நடுவில் ஒரு இதாலிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்பது முஸோலினியின் எண்ணம்.

பெர்லின் ஒலிபரப்பு, 13—8—40.

மூன்று வாரங்களுக்குள் பிரிடன் தோல்வி பெறும். இது நடைபெறாதபோனால் தெய்வ ஸங்கல்பம்தான்.

பெர்லின் ரேடியோ, 29—8—40.

### பொய் அவனையே பாதிக்கிறது.

"முஸோலினி விஷ வாயு பிரயோகம் செய்து அப்புறப்படுத்திய அபிஸீனிய மன்னர் மீண்டும் சிங்காசனத்தில் ஏறிவிட்டான்".

மிஸ்ட்டர் சர்ச்சில் 19—5—43.

"மடகாஸ்கரிலிருந்து மொராக்கோ வரையிலும், கெயிரோவிலிருந்து கஸாப்ளாங்கா வரையிலும், ஏடனிலிருந்து டாகர் வரையிலுமுள்ள பிரதேசங்கள் பிரிடிஷ், அமெரிக்க பிரெஞ்சு தேசத்தாரின் ஆளுகைக்குட்பட்டு விட்டன. மிஸ்ட்டர் சர்ச்சில், 19—5—43.

ஆபிரிக்கா யுத்தத்தில் இரண்டு யதேச்சாதிகாரிகளுக்கும் ஏற்பட்ட நஷ்டங்கள்.

| | | |
|---|---|---|
| மாத்தவர்கள், கைதி செய்யப்பட்டவர்கள் | | 9,50,000 |
| சாமான் வண்டிகள் | ... | 70,000 |
| விமானங்கள் | ... | 8,000 |
| பீரங்கிகள் | ... | 6,200 |
| டாங்கிகள் | ... | 2,550 |
| கப்பல்கள் | | 2,40,00,000 டன்கள் |

700,000 ஜனங்களின் நஷ்டத்துடன் இதாலியைப்போல் 13 மடங்கு பெரியதான ஆபிரிக்க சாம்ராஜ்யத்தை முஸோலினி இழந்துவிட்டான்.

## மத்தியதரைக்கடல்.

### வீண் பேச்சு.

பிரிடிஷ் கடற்படை மத்தியதரைக்கடலை விட்டுச் சென்றுவிடுமென்று எதிர்பார்க்கிறோம்.

ரோம் ரேடியோ, 3—8—40.

மத்தியதரைக்கடலிலுள்ள பிரிடிஷ் கடற்படையின் நடமாட்டத்தை இதாலிய விமானப்படை ஒடுக்கிவிட்டது.

பெர்லின் ரேடியோ, 29—8—40.

மத்தியதரைக்கடலிலும் சமீபக் கிழக்கிலுமுள்ள இதாலியின் குடியேற்ற நாடுகளுக்கு சமீபத்திலுள்ள தேசங்கள் இதாலி வசமாகிவிடும்.

ஸீனர் ஸீனரட்டி, 1941.

மத்தியதரைக்கடலில் ஆகாயத்திலும், கடலிலும் இதாலிதான் எஜமானன்.

கியார்னெல் டி இதாலியா, 12—2—43.

### நடப்பு.

யுத்த ஆரம்பம் முதல் 1943-ம் வருஷம் பிப்ரவரி மாதம் முடிய இதாலிக்கு 40,27,000 டன்கள் எடைமானமுள்ள கப்பல்கள் நஷ்டமாயின.

பிரபுக்கள் சபையில் பிரண்டிஸ் பீல்ட் பிரபு 1-4-43.

டாரண்டோ, மடபான் நிகழ்ச்சிகள் இதாலியப் படைக்கு ஸிம்ம சொப்பனமாயிருக்கின்றன. இதாலியின் ஏழு யுத்தக் கப்பல்களும் வெளியேவர பயப்படுகின்றன.

யுத்தத்துக்கு முன் இதாலி இறக்குமதி செய்த 24 மிலியன் டன்கள் எடைமானமுள்ள சாமான்களில் 4 மிலியன் டன்கள் தரைவழியாகக் கொண்டுவரப்பட்டன. 16 மிலியன் டன்கள் ஜிப்ரால்டர் ஜலசந்தி வழியாகவும், 2 மிலியன் டன்கள் ஸுயெஸ் கால்வாய் வழியாகவும், மற்ற 2 மிலியன் டன்கள் கருங்கடல், ஏட்ரியாடிக் கடல், மத்தியதரைக் கடலிலுள்ள மற்ற துறைமுகங்கள் மார்க்கமாகவும் வந்தன. இப்பொழுது ஜலசந்தியையும் ஸுயெஸ் கால்வாயையும் பிரிடிஷ் கடற்படை மூடிவிட்டது. மத்தியதரைக்கடலில் இதாலியக் கடற்படை பத்திரமாக நடமாட முடியாது.

## பால்கன் நாடுகள்.

### முஸோலினியின் பகல் கனவுகள்.

அல்பேனியாவைப் பிடித்துவிட்டு கிரீஸை முஸோலினி தாக்கியபொழுது தென்கிழக்கு ஐரோப்பா பூராவும் பாஸிஸ்டு ராஜ்யத்தின் அமுலுக்குட்பட்டுவிடுமென்று முஸோலினி மனோராஜ்யம் செய்தான்.

### கனவு மறைந்துவிட்டது.

ஒவ்வொரு மாதத்திலும் அல்பேனியாவிலும், கிரீஸிலும், யூகோஸ்லாவியாவிலும் இதாலியின் மனித நஷ்டம் ஆயிரக்கணக்கில் ஏற்பட்டிருக்கிறது. இதாலியர்கள் உத்தியோக முறையில் வெளியிட்டபடி 1942-ம் வருஷத்

தில் பால்கன் நாடுகளில் இதாலிக்கு ஏற்பட்ட ஆள் நஷ்டம் வட ஆபிரிக்காவில் ஏற்பட்ட நஷ்டத்தைவிட அதிகமானதென்றும் ருஷ்யாவில் ஏற்பட்ட நஷ்டத்தைவிடக் குறைவானதென்றும் தெரியவருகிறது.

ஸ்பிளீடோ பிரபு குரோஷியா சிங்காசனத்தில் உட்காரவில்லை.

ருமேனியாவிலுள்ள எண்ணெய் பிரதேசங்களை ஹிட்லர் பிடித்துக்கொண்டுவிட்டான்.

ஹங்கேரியில் ஜெர்மன் ஆதிக்கம் ஓங்கிவிட்டது. டால்மேஷியா கடற்கரையில் ஜெர்மானியர்கள் நடமாடுகிறார்கள்.

## முஸோலினி துரத்தப்பட்டு எதிர்த்து நிற்கிறான்.

சாம்ராஜ்யத்தை இழந்தும், வட ஆபிரிக்காவில் ஒரு பெரிய சேனை கைதி செய்யப்பட்டும் ருஷ்யப் போர்முனையில் மற்றொரு சேனை அழிந்தும், பால்கன் நாடுகளில் மற்றொரு சேனை பந்தோபஸ்து வேலை செய்கிறதென்று அறிந்தும் இருப்பதிலிருந்து தன்னுடைய மக்கள், ஸர்வ உலகம் எல்லோருடைய முன் முஸோலினி பரிதாப நிலையில் நிற்கின்றான். இதற்கு முன் அவனுடைய கௌரவம் உலகத்தில் ஓங்கிநின்றது. இப்பொழுது அவன் புகழ் பேச ஆரம்பித்துவிட்டான். இவனுக்கு மரியாதை செய்கிறவர் ஒருவருமில்லை. துரதிருஷ்டவசமாக அவன் பேசின வார்த்தைகளையே அவன் விழுங்கவேண்டியிருக்கிறது. ஜெர்மனியின் நட்பு ஏற்பட்டதிலிருந்து இதாலியின் அதோகதி வந்துவிட்டது.

## படையெடுப்புப் பீதி.

### நம்பிக்கை கொண்ட முஸோலினி.

சென்ற சில வருஷங்களாக பிரிடன் யுத்தம் செய்வதாக ஒரு முயற்சிகளையும செய்யவில்லை.

முஸோலினி.

இங்கேயும் உலகத்தில் எந்த இடத்திலேயும் இரண்டாம் போர்முனை ஏற்படாது.

முஸோலினி, 3—8—42.

சிஸிலியானது தரையிலும், கடலிலும், ஆகாயத்திலும் பலமான தற்காப்புகளுள்ளது. அதன்மேல் படையெடுப்பதென்பது முட்டாள்தனம். 4,000 வருஷங்களாக சரித்திரத்தில் புகழ்பெற்ற இந்தத் தீவு சாம்ராஜ்யத்தின் மத்திய ஸ்தானமாக மாறிவிடப் போகும் காலம் வந்துவிட்டது.

முஸோலினி, 1936.

சென்ற சில காலமாக இங்கிலாந்திலுள்ள ஜனங்களின் மனோதைரியம் குறைந்துவிட்டதென்று நாம் அறிகிறோம். படையெடுப்பு பயம் ஒரு புறமும், பஞ்சமேற்படும் என்ற பயம் மற்றொரு பக்கமுமிருப்பதால் ஜனங்கள் என்ன செய்வதென்று திகைத்துநிற்கிறார்கள்.

ரோம் ரேடியோவில் ஆல்டோ வாலோரி என்ற வியாக்யானி, 15—1—43.

### தோல்வியுற்ற முஸோலினி.

இந்த உலக யுத்த அரங்கங்களிலிருக்கும் பலவகைப்பட்ட துருப்புகளில் எட்டாம்படை நவீன முறையில் தயாரிக்கப்பட்டு மிகவும் வலிமையுள்ளது.

ரோம் ரேடியோ, 14—4—43.

நிலைமை பயங்கரமாகயிருக்கிறது. யுத்த அரங்கம் இதாலியைச் சமீபித்து வருகிறது. நாம் ரொம்பவும் கஷ்டங்களை அனுபவிக்கத் தயாராக இருக்கவேண்டும்.

ரோம் ரேடியோ, 12—4—43.

ஸிஸிலியும் ஸார்டீனியாவும் தெற்கு ஐரோப்பாவின் சுற்றுப்புறமுள்ள பெரிய தற்காப்பு ஸ்தலங்கள். பிரிடிஷ் அமெரிக்க சாம்ராஜ்யங்களை எதிர்த்துவரும் இந்த யுத்தத்தில் ஐரோப்பா கண்டத்திலுள்ள அச்சுநாடுகளின் தற்காப்பு அரண்களுக்கு இத்தீவுகள் திறவுகோல் போன்றவைகள்.

ரோம் ரேடியோ, 6—4—43.

இதாலியின் நிலைமை சிரமமானதென்று எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டியதுதான். அதன் சாம்ராஜ்யம் போய்விட்டது. வலுவான ஒரு எதிரி மத்தியதரைக்கடலின் தெற்குக் கரையில் நின்கின்றான்.

ஹானஸ் ரெயிஷ் ஹாக் என்ற ஜெர்மன் பிரபு மே, 1943.

ஜெர்மனிக்குச் சங்கடம் வரும்பொழுது இதாலி போன்ற ஒரு தேசத்தை ஜெர்மனி நம்பினால் அன்றுதான் அதன் துரதிருஷ்டம் துவக்கமாகும்.

ஹிட்லர், ராஷ்னிக்குச் சொன்னது.

ஆபத்துக் காலத்தில் நண்பனுடைய ஒத்தாசையை எதிர்பார்க்கலாமேயல்லாது சதா காலமும் அவனிடமிருந்து ஒத்தாசையை எதிர்பார்ப்பது முட்டாள்தனம்.

மார்ஷெல் பொடாக்ளியோ டிஸம்பர் 23, 1940.

# வேனிர்கால முன்னேற்ற யுத்தம்: ஜெர்மனி தாமதம் செய்வதற்குக் காரணங்கள்.

சென்ற சில காலமாக, ருஷ்யாவின் நீண்ட போர்முனையின் பல பாகங்களில் ருஷ்யாவும் ஜெர்மனியும் ஒன்றை மற்றொன்று பலமாகத் தாக்கத் தயார்செய்துவருகின்றன என்று புலப்படுகிறதென்று டெயிலி டெலகிராப் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது.

ஆகிலும் சென்ற வருஷத்தில் நடைபெற்ற திட்டப்படி நோக்கும்கால் 1943-ம் வருஷத்தில் வேனிர்கால எதிர்ப்பு யுத்த ஆரம்பம் செய்வதில் உபரியாகவே மூன்று வாரங்கள் சென்றுவிட்டன. கிரிமியாவைப் பிடித்ததற்கும் கெர்ச் ஜலசந்தியைத்தாண்டி காகஸஸை நோக்கிச் செல்லுவதற்கும் சென்ற வேனிர் காலத்தில் யுத்தம் ஆரம்பமானது 1942-ம் வருஷம் ஜூன் மீ 8-ம் தேதியன்று. காகஸஸ் எண்ணெய் பிரதேசங்களைப் பிடித்துவிடவேண்டுமென்று ஹிட்லர் அவா கொண்டிருக்கிறானென்று ஹிட்லரின் நோக்கங்களை அறிந்தவரெவரும் மறுக்கமுடியாது. எவ்விதத்திலும் இந்த கேந்திரஸ்தானத்தை ஜெர்மனி தற்காப்பு செய்யவேண்டும். இதை ஜெர்மனி இழந்தால் கிரிமியாவைக் கைப்பற்றுவதற்கும் யூக்ரேனில் ஜெர்மானியரைப் பின்புறம் தாக்குவதற்கும் ருஷ்யாவுக்கு வசதியேற்பட்டுவிடும்.

ருஷ்யா பூராவும் இந்த வருஷத்தில் வேனிர்காலம் முன்னதாகவே வந்துவிட்டது. இப்படியிருந்தும் பலமான முன்னேற்ற யுத்தத்தை ஜெர்மனி ஏன் துவக்கவில்லை.

லெனின்கிராட்டிலிருந்து கருங்கடல் வரையில் ருஷ்யர் ஜெர்மன் துருப்புகளை கொரில்லா நடவடிக்கைகள் மூலமாக இடைவிடாது தொந்தரவுசெய்தும் ஸப்ளை சாமான்களையும் போக்குவரவு மார்க்கங்களையும் விமானங்கள் மூலம் தாக்கியும் வருகின்றனர்கள். ஜெர்மன் விமானப்படையின் நடமாட்டமும் அதிகரித்திருக்கிறது. ஆகிலும் அதன் திறமை குன்றி வருகிறது. கூபான் தீபகற்ப யுத்தத்தில் ருஷ்யர்கள் 35 விமானங்களையிழந்தபொழுது ஜெர்மானியர்களுக்கு 131 விமானங்கள் நஷ்டமாயின.

ஒரு மகத்தான தாக்குதல் செய்ய துருப்புகளைத் திரட்டுவதென்பது இருதரப்பாருக்கும் கஷ்ட சாத்யமானது. ஜெர்மனிக்கு ஏற்பட்ட மனித, பொருள் நஷ்டத்தை உடைபட்டு வரும் ஜெர்மன் தொழிற்சாலைகள் ஈடுசெய்யமுடியாது. ருஷ்யாவுக்கும் சிக்கலான பிரச்னைகளிருக்கின்றன. ஆகிலும் அதனுடைய தொழிற்சாலைகள் ஜெர்மானியரின் கண் வீச்சுக்கப்பாலிருக்கின்றன. நன்றாய் வேலை செய்து வருகின்றன. ருஷ்யாவுக்கு நேச நாடுகள் ஏராளமான சாமான்களை அனுப்பியிருக்கிறார்கள்.

ருஷ்யப் போர்முனையில் ஜெர்மனி 190 டிவிஷன்கள் கொண்ட துருப்புகளை வைத்திருக்கிறது. ருஷ்யாவின் பளுவைக் குறைப்பதுதான் அமெரிக்க பிரிடிஷ் யுத்த தந்திரத்தில் முதன்மையான விஷயமாக வாஷிங்டன் மகாநாட்டில் பேசப்பட்டது. ஜெர்மனி கடைசிப் பிரயத்னம் செய்யப் போவதால் இந்தத் தாக்குதல் மிகவும் பலமாகயிருக்கக்கூடும். ஆகிலும் நேசதேச விமானப்படையும் தரைப்படையும் ஜெர்மன் வலிமையைக் குலைத்துவிடும்.

ஜெர்மனியின் திட்டத்தை டுனிஸியா நிகழ்ச்சிகள் கவிழ்த்துவிட்டன. ருஷ்யாவில் வேனிர் கால முன்னேற்ற யுத்தத்தில் தாமதம் ஏற்பட்டதற்கு அச்சு நாட்டுப் பொது மக்களிடம் சமாதானம் கூறுவதற்காக அச்சுப் பிரசாரர்கள் முயன்று வருகிறார்களென்று டெயிலி எக்ஸ்பிரஸின் இஸ்தான்பூல் நிருபர் அறிவிக்கிறார்.

இது டம்பமான பேச்சாகயிருந்தாலும், புகாரெஸ்டிலிருந்து கிடைத்த இரகசியமான தகவல்களிலிருந்து, டுனிஸும், பிஸர்ட்டாவும் ஜூலை மாதம் முடிவு வரையில் சமாளித்து நிற்குமென்று மதித்து 1943-ம் வருஷ வேனிர் கால எதிர்ப்பு திட்டங்களை அச்சு நாடுகள் நிறுவினதென்று வெளியாகுகிறது. டுனிஸியாவின் வெற்றிக்குப்பின் இதாலியையும் கிரீஸையும் படையெடுக்குமுன் நேசதேசத் துருப்புகள் குறைந்த பக்ஷம் இரண்டு மாதங்களாவது ஓய்வெடுத்துக் கொள்ளவும், திருத்தியமைக்கவும் முஸ்தீப்புகள் தயாரித்துக்கொள்ளவும் கழிக்கவேண்டுமென்று ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் மதித்திருந்தார்கள்.

## நிறுவப்பட்ட முன்னேற்ற யுத்த திட்டம்.

இதற்குள்ளாகவே, ஏற்கனவே போடப்பட்ட திட்டப்படி மே மீ 16-ம் தேதியன்று யுத்தம் ஆரம்பித்து ருஷ்யாவை ஜெர்மனி ஒழித்துவிட வேண்டுமாம். இது நடைபெற்றிருந்தால் ருஷ்யப் போர்முனையிலிருந்து ஏராளமான துருப்புகளைக் கொண்டுபோய் ஜெர்மனியின் ஐரோப்பிய அரணின் மத்தியதரை எல்லைச்சரகங்களைத் தற்காப்பு செய்ய உபயோகப்படுத்திவிடலாம்.

ஜெர்மானியர் மதிப்புப் போட்டதற்கு இரண்டரை மாதங்களுக்கு முன்னதாகவே டுனிஸியா யுத்தம் முடிவடைந்துவிட்டதால் நேசநாடுகளின் ஐரோப்பிய படையெடுப்பும்

ஸெப்டம்பர் மாதத்திலிருந்து ஜூலைக்கு நெருங்கிவிட்டது. கிழக்குப் போர்முனையிலிருந்து தெற்குப் போர்முனைக்குப் துருப்புகளைக் கொண்டுபோவதற்கு முற்போக்காக ருஷ்யாவை முறியடிக்கும் வேலையை நடத்த ஜெர்மனிக்கு இரண்டு மாத அவகாசம் தானிருக்கிறது.

ஆபிரிக்காவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்குப்பின் ஹிட்லரின் தளகர்த்தர்கள், முக்கியமாக கீடல் என்பவர், ருஷ்யாவை மிகவும் பலமாகத் தாக்கும் ஹிட்லரின் திட்டத்தைப் புரக்கணித்துவிட்டார்களென்று பால்கன் நாடுகளிலுள்ள ராணுவ நிபுணர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். ருஷ்யர்கள் மகத்தான தாக்குதல் செய்வதைத் தடுப்பதற்காக வெவ்வேறு இடங்களில் சிறிய தாக்குதல்களைச் செய்தால் போதுமென்று அவர்கள் உத்தேசித்திருக்கிறார்கள்.

### புதுமாதிரியான பிரசாரம்.

ஏற்கனவே முன்னேற்ற யுத்த திட்டம் போட்டவர்கள் தளகர்த்தர்கள் சொல்லும் யோசனையை ஏற்றுக்கொண்டார்களென்பதற்கு அத்தாக்ஷியில்லை. ஆகிலும் சென்ற சில நாட்களாக ஜெர்மானியர் செய்துவரும் புதுமாதிரியான பிரசாரத்திலிருந்து கீடல் கக்ஷியைச் சேர்ந்தவர்களின் யோசனை அங்கிகரிக்கப்பட்டதென்பது வெளியாகுகிறது.

புதிய பிரசார த்வனி யாதெனில், ருஷ்யாவின் உள்நாட்டு நிலைமை, முக்கியமாக உணவுப் பிரச்னை, மோசமாகயிருக்கிறது. ஜெர்மானியர்கள் தங்களிடமுள்ள ஸ்தானங்களைக் காப்பாற்றிக்கொண்டு சில இடங்களில் தாக்குதல் செய்துவந்தாலே போதுமானது. இதிலிருந்தே ருஷ்யாவில் உள்ளநாட்டுக் குழப்பம் ஏற்பட்டு ருஷ்யா வீழ்ச்சிபெற்றுவிடும். இதற்காக மனிதர்களைக் காவுகொடுக்கவேண்டியது அவசியமில்லை. ருஷ்யாவில் உற்பத்திக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் தான் சமீபத்தில் பிரிடிஷ், அமெரிக்க தளவாடங்களை ருஷ்யா யுத்தத்தில் உபயோகப்படுத்தி வந்திருக்கிறது.

### தாக்கப்போதுமான பலமின்மை.

இந்தத் தாமதத்துக்கு சமாதானங்கள் பலஉள, ருஷ்யாவில் தற்காப்பு முறைகளைத்தான் கையாளப்போகிறோமென்று ஜெர்மனி முடிவுசெய்துவிட்டதென்று டெயிலி எக்ஸ்பிரஸ் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.

ஐரோப்பாவின் மேற்கிலும் கிழக்கிலும் ஏற்பட்டிருக்கும் பீதியைத்தடுப்பதற்காக ஜெர்மன் படைகள் திருத்தியமைக்கப்படுகின்றன என்று நேசநாடுகள் நம்பவேண்டுமென்று சொல்லுவது பெரும் தவறாகும். மிஸ்டர் சர்ச்சில் சமீபகாலத்தில் வெளியிட்ட பிரகாரம் செம்படையை எதிர்க்க ஜெர்மனி 190 டிவிஷன் ஜெர்மன் துருப்புகளையும், 20 இதர நாட்டுத் துருப்புகளையும் வைத்திருக்கிறதென்பது ஸ்பஷ்டமான விஷயம். இந்த மகத்தான படை அமைப்பில் பலஹீனம் ஏற்பட்டால் இது ருஷ்யர்களுக்குச் சுலபமாகப் புலப்பட்டுவிடும்.

### தாக்குதல் நடைபெறவில்லை.

மூன்று வாரங்களுக்குமுன் மாஸ்கோவுக்கு மேற்கில் ஜெர்மனி தாக்குமென்று ருஷ்யர்கள் எதிர்பார்த்து அதைச் சமாளிக்க படைபலத்தை தயாரித்துவைத்திருந்தார்கள். மாரிகாலம் அவ்வளவு கடுமையாக யில்லாதபொழுதும் மகத்தான நடவடிக்கைகளைத்துவக்க தரைலாயக்காக யிருந்தபொழுதும் எதிரி யுத்தம் ஆரம்பிக்கத் தயாராகயிருந்தான். ஆகிலும், தாக்குதல் ஏற்படவில்லை. இதற்குப் பதிலாக டூனிஸியாவில் ஜெர்மன் தற்காப்பு யுத்தம் திடீரென்று நிலைகுலைந்தது. சிறந்த முஸ்தீப்புகளுள்ள ஒரு சேனை சரணடைந்தது. ஜெர்மன் முன்னேற்ற யுத்தம் தாமதப்பட்டதற்கு டூனிஸியா தோல்விதான் முக்கிய காரணமாயிருக்கலாம். இதை விஞ, பிரிடிஷ் அமெரிக்க வெடி விமானங்களின் கடுமையான குண்டு வீச்சுகளும், இருப்புப் பாதைகளை ருஷ்ய நெடுந்தூரம் செல்லும் விமானங்கள் நொருக்குவதும் சேர்ந்து, எதிர்த் தாக்குதலை நிரந்தரமாகவே ஒத்தி வைத்துவிடவேண்டுமென்று ஜெர்மானியர்கள் முடிவு செய்துவிட்டார்கள் போல் தோன்றுகிறது.

ஜெர்மன் துருப்புகள் கிழக்குப் போர்முனையிலிருந்து மற்ற இடங்களுக்கு சென்றிருக்கின்றன என்பதற்கு ஒரு ஹேஷ்யமுமில்லை. பிரான்ஸிலும், ஹாலந்திலும் நார்வேயிலும் 45 டிவிஷன் துருப்புகளையும் பால்கன் நாடுகளில் 10 டிவிஷன் துருப்புகளையும், ஜெர்மனியிலும் போலந்திலும் 50 டிவிஷன் துருப்புகளை உதவிப் படையாகவும் ஹிட்லர் வைத்திருக்கிறான்.

### உண்மையான விஷயம்.

இதை விஞ, ஜெர்மனியிலும், மேற்கு ஐரோப்பாவிலும் 1 மிலியன் விமான தரைப் படையாளர் பரவியிருக்கிறார்கள். ராணுவத்திலிருந்து தள்ளப்பட்ட திருட சரீரமுள்ளவர்கள் கொண்டதும் ஐரோப்பிய தற்காப்புகளை பலப்படுத்தி வருகிறதுமான டாட் தொழிலாளர் சங்கத்தை சேர்ந்தவர்கள் 14 லக்ஷம் ஜனங்களிருக்கிறார்கள். இதை ஆதாரமாகக்கொண்டு தான் ருஷ்யா முன்னேறித் தாக்குதல் செய்யாது என்று ஜெர்மன் பிரசாரர்கள் வெளியிட்டு

வருகிறார்கள். ருஷ்யாவுக்குப் போதுமான பலமில்லாததுதான் இதற்குக் காரணமென்று கூறப்படுகிறது.

உண்மையாதெனில், ஜெர்மனி பலமான தற்காப்புகளைச் செய்து முடித்துவிட்டால் ருஷ்யச் செம்படை மகத்தான முன்னேற்ற யுத்தத்தைத் துவக்கி பலஹீனமடைந்து விடுமென்றும் அப்பொழுது ஜெர்மனி அவர்களை வெற்றிகரமாகச் சுலபமாகதாக்கிவிடலாமென்றும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்த நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு ருஷ்யா மட்டும் பொறுப்பேற்றுக் கொள்ளாது. மற்ற நேசதேசங்களின் நடவடிக்கையையும் இது பொருத்ததாகும்.

தெற்கிலும், மேற்கிலும் படையெடுப்பு ஏற்பட்டால்தான் ஜெர்மனியின் வருங்கால யுத்த தந்திரம் உருவாகும். ஜெர்மனி நாம் அமைக்கப்போகும் பல போர்முனைகளில் சண்டை செய்யவேண்டுமென்பதுதான் நேசநாடுகளின் அபிப்பிராயம். இந்த யுத்த தந்திரத்தை நாம் நடைபெறச் செய்யும் சாமர்த்தியத்தைப் பொருத்துத்தான் யுத்த நீடிப்பு நிர்ணயமாகும்.

---

## சண்டை விமானங்களுக்குள் யந்தர அமைப்பு வித்தியாசம்.

(ஆலிவர் ஸ்டுவர்ட்).

(பிரிடிஷ் ஒலிபரப்பு நிலய பிரசங்கம்).

விமானப்படையின் மேன்மை ஏற்படவேண்டியபொழுது சண்டை விமானத்தின் பேரில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. வெடி விமானங்கள் பகலில் குண்டு வீசுவதற்கும், விமான தளங்களில் அலுவல்கள் சரிவர நடப்பதற்கும், எதிரி விமானங்களின் விமானத் தாக்குதல்களினின்றும் தரைப்படைகளை ரக்ஷிப்பதற்கும், பழுதுபடாமல் சாமான் ஸப்ளைகள் சரிவரப் போய்ச்சேருவதற்கும் முக்கியமானது சண்டை விமானம்தான்.

1940-ம் வருஷத்தில் ஜெர்மன் விமானப் படையின் பலத்தை எதிர்த்து நிற்பதற்கு பிரான்ஸுக்கு சண்டை விமானங்கள் தான் தேவையாயிருந்தன. கிரீஸ், கிரீட், மேற்குப் பாலைவனம், டூனிஸியா போர்முனைகளிலும் இவைகள்தான் அவசியமாயிருந்தன.

ஆகாய ஆதிக்கம் பெறுவதற்கு அடிப்படையாக சண்டை விமானங்கள் அவசியமாகும். இந்த யுத்தத்தில் விமான ஆதிக்கமானது இந்தச் சிறிய, வேகம் பொருந்திய விமானத்தைப் பொறுத்திருக்கிறது. சிறந்த சண்டை விமானத்தின் மதிப்பு பிரிடனுக்காக நடைபெற்ற யுத்தத்தில் வெளிப்பட்டது. அதன் படிப்பினையை நாம் மறந்து விடமுடியாது.

பிரிடனுக்காக நடைபெற்ற யுத்த சமயத்தில் வேலை ஆரம்பிக்கப்பட்டு திட்டங்கள் போடப்பட்டன. அதன் விளைவுகளை நாம் இப்பொழுது காண்கின்றோம். சமீப காலத்தில் புதிதான மெர்லின் இஞ்ஜின் உள்ள விமானங்களின் விவரங்களை விமான உற்பத்தி இலாகா வெளியிட்டது. பிரிடனுக்காக நடந்த யுத்தத்தில் உபயோகித்த ஸ்பிட் பையர், ஹரிகேன் விமானங்களைவிட புதிய மெர்லின் இஞ்ஜினிலுள்ள விமானங்கள் அதிக வலுவும் உயரப் பறக்கும் சக்தியும் பெற்றவை. இந்த இஞ்ஜினிலுள்ள ஸ்பிட் பையர் விமானம் அதிக வலுவுள்ளதாகவும் எதிரியின் சண்டை விமானங்களைத் தாக்குவதற்கு அதிக சக்தியுள்ளதாகவுமிருக்கிறது.

### திட்டம் போட்டுக்கட்டுவது.

ஒவ்வொரு சண்டை விமானத்தையும் சிலாக்கியமாக அமைக்கும் வேலையானது மகத்தான காரியம் ஆகும். இதன் முக்கியத்வத்தை அறிந்த, யுத்தத்தில் ஈடுபட்ட நாடுகளெல்லாம் அதிக சக்தியும், அதிக வேகமும், அதிக உயரம் பறக்கும் சாதனமும் அளிக்கக்கூடிய யந்தரங்களைத் திரட்டுவதில் தாராளமாகப் பொருள் செலவிட்டு வருகிறார்கள். இவ்விஷயத்தில் அரசாங்க ஒத்தாசை மட்டும் போதாது. சண்டை விமானங்களை உண்டுபண்ணுவதற்கு திட்டம் போட்டு அதை நிறைவேற்றுவது தேசத்தின் சக்தியைப் பொறுத்ததாகும். இவ்விரண்டிலும் காரியாம்சையில் நடத்துவதுதென்பதுதான் மிகவும் கஷ்டமானது; சிரம சாத்தியமானது.

ஸ்பிட் பையர் விமானம் கட்டுவதில் R. J. மிச்சல் என்பவர் அதிக ஆர்வம் காட்டினார். விமான உற்பத்தி சரத்திரத்தில் இது ஒரு சிறந்த முறையாகும். ஸ்பிட்பையர் விமானத்தை கண்ணுற்றாலேயே அதன் மேன்மை புலப்படும். உயர்வான பாக்வுல்ப் 190 விமான பலத்தைக்கொண்டு ஜெர்மானியர்கள் சண்டை விமான உற்பத்தியில் மேன்மையடைந்திருப்பார்கள். ஆனால் நமது ஸ்பிட்பையர் விமானங்கள் அபிவிருத்தியடைந்தும் மெர்லின் இஞ்ஜின்கள் புது மாதிரியாக அமைக்கப்படுவதிலிருந்தும் ஜெர்மன் ஆதிக்கம் பயன்படவில்லை.

### அதிக வேகமுள்ள ஹரிக்கேன் விமானங்கள்.

பிரிடனுக்காக நடந்த யுத்தத்துக்குப்பின் ஹரிகேன் விமான அமைப்பிலும் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஸ்பிட்பையர் விமானத்தைவிட மற்றொரு அம்சத்தில் ஹரிக்கேன் விமானத்தில் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது. வெடிகுண்டு வீசுவதற்கும் கீழாகப் பாய்ந்து தாக்குவதற்கும் ஹரிக்கேன் விமானத்தில் வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த காரியங்களுக்காக அதன் கனம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. வெடி குண்டுகளை ஏற்றிச் சென்றாலும், அதன் வேகம் அதிகரித்துவிட்டதே ஒழிய குறைவுபடவில்லை.

சண்டை விமானங்களின் உயர்வுக்கு விமானங்களின் திருத்தியமைப்புத்தான் அத்தியாவசியம். இதைத்தான் பிரிடிஷ் விமானப்படை நம்பியிருக்கிறது. இஞ்ஜின்களையும், விமானங்களையும் உற்பத்தி செய்யும் கம்பெனிகள் விமான அமைப்பில் அதிக வேகமும் அதிக உயரச் செல்லும் சக்தியும் அமைக்க முயன்று வருகிறார்கள். புது தினுசு விமானங்களும் கட்டப்படுகின்றன. இவைகளின் அமைப்பு திட்டங்கள் நேர்த்தியானதாகவிருந்தாலும் சிறந்த முறையில் அமைக்கப்பட்ட பழைய ரகங்களை பங்கப்படுத்தவேண்டுமானால் புதிய தினுசுகள் அதிக உயர்வாகயிருக்கவேண்டும். யுத்த முடிவில் மெர்லின் இஞ்ஜினிலுள்ள ஸ்பிட்பையர் விமானங்கள் தான் விமானப் போரில் சிறந்தவைகளாகயிருக்குமென்று சில விமானிகள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

### முதலில் தாக்கப்படுவது.

எதிரி விமானங்களோடு யுத்தம் செய்யும்பொழுது முதலில் துணைக்கு வந்திருக்கும் சண்டை விமானங்கள் தான் தாக்கப்படும். இந்த முறையானது டூனிஸியாவுக்கும் ஸிஸிலிக்கும் மத்தியில் விமான மூலம் சாமான்கள் சென்றபொழுது நமது விமானங்களால் கையாளப்பட்டது. நேசதேச விமானங்கள் பிரான்ஸிலுள்ள யுத்தத் தொழிற்சாலைகளைத் தாக்கச் செல்லும்பொழுது இதற்கு முற்றிலும் மாறான தாக்குதல் ஏற்படுகிறது. அதாவது சண்டை விமானங்களில் துணையுடன் செல்லும் நமது வெடி விமானங்களை எதிரி தாக்கும் பொழுது வெடி விமானங்களைத் தாக்குவதற்கு முன்னதாகவோ அல்லது அதே காலத்திலோ நமது சண்டை விமானங்களையும் தாக்குகிறார்கள். யுத்த தந்திரத்தை நிறுவுவதில் சண்டை விமானங்கள் தான் திட்டம்போடுகின்றன. விமானப்படை மேன்மைக்கும் ஆகாய ஆதிக்கத்துக்கும் சண்டை விமானங்கள் முக்கிய காரணம்.

ஜெர்மன் விமானங்கள் ஸ்பிட் பையரின் உயர்வை அவமதிக்க முடியவில்லையென்று நான் சொல்லும்பொழுது எதிரியின் வலிமையையும், பாக்வுல்ப் 190 என்னும் விமானத்தை சிருஷ்டிசெய்த ஜெர்மன் இஞ்ஜினியரான கர்ட்டாங்கின் வேலைத் திறத்தையும் நான் மதிக்கவில்லை என்று எண்ணவேண்டாம்.

வருங்காலத்திய சரித்திர லிபிகள் ஸ்பிட் பையர் போன்ற சண்டை விமானங்கள் இந்த யுத்தத்தில் செய்திருக்கும் வேலைகளைப்பற்றி அதிகமாக விவரித்து எழுதுவார்களென்றே நான் நம்புகிறேன். ஒன்றுமட்டும் நிச்சயம், ஸ்பிட் பையர்கள் உபயோகப்பட்ட பிரதேசங்களில் நேசநாடுகள் ஆகாய ஆதிக்கம் பெற்றிருக்கிறார்கள். வட ஆபிரிக்காவில் துருப்புகள் இறங்கிய வரையில் இதன் புகழ் ஓங்கியிருந்தது. அதன் பிறகு கடல் விமானம் என்று வேறு பெயர்கொண்ட ஸிபையர் விமானங்கள் ஆபிரிக்கா யுத்தத்தில் ஈடுபட்டிருந்தன.

விமான யுத்தத்தில் சண்டை விமானபலம்தான் முக்கியமென்பது உண்மையானால், இது விஷயத்தில் நேசநாடுகள் நல்ல ஸ்திதியிலிருக்கிறார்களென்பது நிச்சயம்.

---

## நேசநாட்டாரின் சிறந்த தளகர்த்தர்களின் உத்பவம்.

(*L. S. B.* ஷாபிரோ).

ரோமல், வான்ஆர்ணிம், வான்பாக், வான் மன்ஸ்டென், வான்ரண்ட்ஸ்டெட் போன்ற ஜெர்மன் பெயர்கள் ஒவ்வொரு வீட்டிலும் அடிக்கடி கூறப்படுகின்றன. இவர்களிடமில்லாத சக்தியையும் சாதுர்யத்தையும் நாம் அவர்களிடமிருப்பதாகப் பாராட்டுகிறோம். நமது தளகர்த்தர்களைவிட ஜெர்மன் சேனாதிபதிகளை மேநாட்டு ஜனநாயக நாடுகள் நன்றாய் அறிந்திருந்தார்களென்பது ஆச்சரியமானது.

சென்ற இரண்டு வருஷங்களுக்குள்ளாக நேசநாடுகளில் சிறந்த சேனாபதிகள் தோன்றியதைப்பற்றிப் பேசும்பொழுதுதான் ராணுவத் தலைவர்களைப்பற்றி ஆராய்ச்சி செய்வதவசியமாகுகிறது. நல்ல சமயம் வாய்த்திருக்கிறது. ஏனென்றால் சமாதான காலத்தில் புத்திசாலியான சிப்பாயைப்பற்றி நாம் கவனம் செலுத்துவதில்லை, அவனை ஆதரிப்பதுமில்லை. ஆகையால் நம்முடைய சேனாபதிகளின் உயர்வைப்பற்றி நமக்குக் குறைவான அபிப்பிராயத்துடன் தான் நாம் அவர்களை மதிக்கிறோம்.

## புதிய தலைவர்கள்.

மூன்றுவருஷம் யுத்தம் நடைபெற்றபின் நமது சேனுபதிகள் சிலாக்கியமானவர்களென்ற தோற்றத்துக்கு இடமுண்டாகிவிட்டது. நாம் சொல்பகாலத்துக்குள் திரட்டிய படைகளிலிருந்து பெரிய ராணுவத்தலைவர்கள் தோன்றியிருக்கிருர்கள். அவர்களிடம் நாம் பூர்ணமான நம்பிக்கை வைக்கலாம். நமது வாலிபர்களின் ரக்ஷணையையும் அவர்களிடம் நாம் ஒப்புவிக்கலாம்.

யுத்த ஆரம்பத்தில் ஜெர்மானியர்களை எதிர்த்து நிற்கக்கூடிய ஒரே ஒரு சேனுபதிதான் பிரிடனிலிருந்தாரென்பது பொதுமக்களறிந்தவிஷயம். இவர்தான் ஸர் ஆர்ச்சிபால்ட் வேவல். பேர்ல் துறைமுகத்தை ஜப்பானியர் தாக்கியபொழுது அமெரிக்கா யுத்தத்தில் இறங்கியபொழுது அமெரிக்காவிலும் சாமர்த்தியமுள்ள ஒரு தளகர்த்தர்தானிருந்தார்.

அவர்தான் ஜெனரல் டக்ளஸ் மாக் ஆர்தர். அவர் இப்பொழுது தென்மேற்கு பஸிபிக்கில் நேசதேசப்படைகளுக்குத் தளகர்த்தராகயிருக்கிருர்.

இன்று நமது தளகர்த்தரின் ஜாபிதாவில் அநேகம்பேர்கள் பதிவு பெற்று விட்டார்கள். பீல்ட் மார்ஷல் ரோமலின் சாமர்த்தியத்தை முறியடித்து வட ஆபிரிக்கா பூராவையும் பிடித்த ஜெனரல் ஸார் ஹாரோல்ட் அலெக்ஸாண்டர் ஒருவர். அவர் வடக்கு அயர்லாந்தைச் சேர்ந்தவர். கிளார்க் கேபிள்போல் தோற்றமுள்ளவர். ஹென்ரி போர்ட்போல் திட்டம் வகுக்கக்கூடியவர். டெம்ப்ஸிபோல் எதிரியைத் தாக்கக்கூடியவர்.

டங்கர்க்கில் தைரியமாகக் கடைசிவரையில் எதிர்த்து நின்றது அலெக்ஸாண்டர்தான். பிரான்ஸைவிட்டு இவர்தான் கடைசியாகப் பின்வாங்கினர். ஐரோப்பிய யுத்த அரங்கத்தில் மறுபடியும் காலடிவைப்பதற்கு இவரை முதலில் சொல்லக்கூடும்.

அலெக்ஸாண்டர் புகழ்பெற்றதுபோலவே எட்டாம் படையைச்சேர்ந்த ஜெனரல் மாண்ட் காமரியும் கியாதிபெற்றுவிட்டார். இவரும் இந்த யுத்தத்தினுல்தான் கீர்த்திபெற்ருர். பிரிடிஷ் ராணுவ வட்டாரங்களில் பெயர் தெரியாமலிருந்தவர். இப்பொழுது சென்ற 30 வருஷங்களுக்குள்ளாக பிரிடிஷ் சேனுபதிகளுக்குள் இவ்வளவு சாமர்த்தியமுள்ளவர் ஒருவருமிருந்ததில்லையென்று புகழ்பெற்றுவிட்டார். பிரிடனில் இவருடைய பெயரைக்கேட்டு ஜனங்கள் வரவேற்றுக் கரகோஷம் செய்யும்பொழுது, தோல்வியுற்ற ஜெர்மானியர்கள், இதாலியர்கள் மனதில் கலக்கம் உண்டாகுகிறது.

வட ஆபிரிக்காவில் ஏராளமான பலவகைப்பட்ட நேசதேசத்துருப்புகள் சாவதானமாக இறங்கியதிலிருந்து அமெரிக்காவின் ஜெனரலான ஈஸன் ஹவர் நேசதேச சேனுபதிகளின் கோஷ்டியில் சேர்ந்துவிட்டார்.

இவரும் இந்த யுத்தத்தில்தான் முன்னுக்குவந்தவர். இரண்டு வருஷங்களுக்கு முன்னல் இவர் வாஷிங்டனிலுள்ள யுத்த இலாகாவில் ஒரு கர்னலாகயிருந்தார். இன்று வட ஆபிரிக்காப் போர்முனையின் தளகர்த்தராக நிற்கின்ருர்.

### கனடாவைச்சேர்ந்த யுத்தவீரர்.

பிரிடிஷாரின் பொதுமக்களின் கவனத்தைக் கவரும் மற்ருெருவர் கனடாவின் லெப்டினண்ட் ஜெனரலான மாக்நாடன் என்பவர். அவர் இதுவரையில் எதிரியை எதிர்த்து ஒரு நடவடிக்கையும் நடத்தவில்லை. ஆகிலும் கனடியத்துருப்புகளை கவசம்பூண்ட துருப்புகளாகவும் தீரமாகச் சண்டைபோடுகிறவர்களாகவும் அவர் தயாரித்திருப்பதிலிருந்து, ராணுவ உலகத்தில் ஒரு முக்யஸ்தராக அவர் விளங்குகிருர்.

நமது ஸ்வதந்திர மக்களின் மதிப்புக்கும் நம்பிக்கைக்கும் லாயக்குள்ள அநேக சிப்பாய்கள் தோன்றியிருக்கிருர்கள். நமது நாகரீக உலகத்துக்கு பேராபத்து வந்தபொழுது பிராங்க்ளின் ரூஸ்வெல்ட், வின்ஸ்டன் சர்ச்சில் போன்ற அமானுஷமான நடையுள்ள தலைவர்கள் நமக்குத் தோன்றும்படியாக அனுகூலம் செய்த தெய்வம் இப்பேர்ப்பட்ட அநேக தலைவர்களையும் நமக்கு அளித்திருக்கிறதென்று நாம் நினைக்கவேண்டும்.

(பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயத்தில் செய்த பிரசங்கத்தின் சுருக்கம்).

# அச்சுநாடுகள் துருக்கியைத் தாக்குவார்களா ?

(லியோனர்ட் கிர்சென்).

"துருக்கியின் நடவடிக்கை என்ன" என்று அச்சுநாட்டாரைச் சேர்ந்த ஒவ்வொரு வரும் பிரச்னம் செய்கிருர்கள். துருக்கியின் நடவடிக்கையில் மாறுதலில்லை. அவ்விதமாகவே துருக்கி சம்பந்தமாக மற்ற நாடுகளின் நடவடிக்கைகளும் மாறுதலடையாமலிருக்கவேண்டும். துருக்கியில் ஒரு பழமொழியுண்டு. "அரையிலடைபட்டு, விரட்டப்பட்ட பூனையும் புலியாக மாறிவிடும்" என்பது. ஜெர்மனியும், ஜெர்மனியின் பரிவாரங்களும் இவ்விதமான வெறி பிடித்த பூனைகள்.

இந்த வெறி பிடித்தவர்கள் துருக்கியைத் தாக்குவதற்கு சந்தர்ப்பமுண்டா? எந் நிலைமையிலும் துருக்கி அக்கிரம யுத்தம் ஆரம்பிக்காது. ஆகையால் அச்சுநாடுகள் அதைத் தாக்க ஆரம்பித்தால்தான் துருக்கி யுத்தத்தில் ஈடுபடும். துருக்கியைத் தாக்க ஜெர்மனிக்கு வசதியில்லை. துருக்கியைத் தாக்குவதற்கு படைகளைத் திரட்டுவதற்கு ஆறு வாரம் பிரயத் தனம் செய்யவேண்டும். அவ்வித தயாரிப்பு சின்னங்கள் ஒன்றும் புலப்படவில்லை. நிச்சய மாக ஹிட்லர் துருக்கியைத் தாக்கமுடியாது. முஸோலினி இந்தக் காரியத்தைச் செய்யக் கூடுமா?

### அவனாலும் முடியாது.

சமீபகாலத்தில் ஆக்கிரமிப்பு நாடுகளிலிருந்த இதாலியத் துருப்புகள் தாயகம் அழைக்கப் பட்டுவிட்டனவென்று நமக்குத் தெரியவருகிறது. ஆக்கிரமிப்பு நாடுகளான பால்கன் நாடு களில் கொலை செய்வதும், பந்தோபஸ்து செய்வதுமான வேலைகளை ஜெர்மானியர்களும் பல்கேரியர்களும் செய்துவருகிருர்கள். இந்த பளுவை ஜெர்மனி பூராவும் ஏற்றுக்கொள்ள பிரியப்படவில்லை. தாயகம் திரும்பிவரும் இதாலியத் துருப்புகள் ஜனங்களின் மனோ நிலைமையைக் கெடுத்துவிடும். அதிலிருந்து கிளர்ச்சி ஏற்பட்டு ஜனங்கள் பஹிரங்கமாகக் கலகமும் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். இதாலியிலிருந்து துருப்புகளை வெளியே அனுப்பமுடியாது. ருஷ்யப் போர்முனைக்கும், டுனிஸியாவுக்கும் இதாலியத் துருப்புகளை இனிமேல் அனுப்பமுடியாது. ஆகையால் துருக்கியைத் தாக்குவதற்கும் இதாலியில் உபரிப் படைகளில்லை.

இச்சமயத்தில் கமால் அடாடர்க்கைப் பற்றிய ஒரு சிறிய விருத்தாந்தம் ஞாபகம் வருகிறது. சிநேகிதர்களுடன் சம்பாஷணை செய்யும்பொழுது அவர் சில உருவான திட்டங்களை வெளியிடுவார். இவைகள்தான் அவருடைய ராஜீய திட்டங்கள். ஒரு தடவை அவர் சொன்னதாவது "துருக்கி பெரிய வல்லரசாக ஆகவேண்டுமானல் அது ஒரு பெரிய வல்லரசுடன் சண்டைபோட்டுப் பூர்ணமான வெற்றிபெறவேண்டும். நாம் சண்டைபோட்டு முறியடிக்கக்கூடிய தேசம் இதாலிதான்." இதாலியர்கள் இதை நன்கு அறிவார்கள். கிரீஸில் நடைபெற்ற யுத்த அனுபவங்களையொட்டி இதாலி துருக்கியைத் தாக்கினல் தங்களுடைய கதி என்ன ஆகுமென்று இதாலிக்குத் தெரியும்.

மற்ருெரு தேசமாகிய பல்கேரியா இருக்கிறது. ஸால்ஸ்பர்க்கில் போரிஸ் மன்னரைத் தூண்டிவிட்டு துருக்கியில் இதன் அதிர்ச்சி எவ்வளவு தூரம் ஏற்படுகிறதென்று பார்க்கும்படி ஹிட்லர் அவனிடம் சொல்லியிருக்கலாம். பல்கேரியா 30 டிவிஷன் துருப்புகளை அனுப்பலாம். ஜெர்மானியர்களின் விமானப்படை, இயந்திர சாதனங்கள் ஒத்தாசையுடன் அது துருக்கியைத் தாக்கலாம். பால்கன் நாடுகளில் தன்னுடைய ஆதிக்கம் போய்விட்டதென்று நேசநாடுகள் நம்பவேண்டுமென்று ஹிட்லர் வேஷம் போடுகிருன். ஐரோப்பாவில் அடி வயறுப்பக்கத்தில் பால்கன் நாடுகள் பலஹீனமானவையென்று காண்பிக்க ஹிட்லர் முயலுகிருன். இதாலியை நேசநாடுகள் தாக்கினல் தனக்கு அழிவு வந்துவிடுமென்று ஹிட்லர் பயப்படுகிருன்.

### சக்தியற்ற நாடுகள்.

இதேசமயத்தில் மத்தியதரைக்கடலின் கிழக்குப் பக்கத்தில் ஒரு புதிய யுத்தம் ஆரம்ப மானல், ஐரோப்பாவில் நேசதேசங்களின் படையெடுப்புத் திட்டம் ஒதுக்கி வைக்கப்படலாம். ஆகையால்தான் துருக்கியை பல்கேரியா தாக்கலாமென்று துருக்கி எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறது. ஆகிலும் தங்களுடைய வலிமை போய்விட்டதென்றும், அச்சுநாடுகளின் பிடிக்கியில் அவர்கள் நன்ருய் அகப்பட்டுக்கொண்டு விட்டார்களென்றும் அவர்களுடைய உதவியில்லாமல் யுத்தம் செய்யமுடியாதென்றும், விசேஷமாக ஜெர்மன் ஆயுதங்களும் ஜெர்மன் விமானப்படையும் தங்களுக்கு உதவி செய்யவேண்டுமென்றும் அவர்கள் அறிவார் கள்.

இவ்விதமாக போக்குக்காட்டும் யுத்தங்கள் நேசதேசங்கள் துருக்கி இவைகளின் திட்டத்தைக் குலைக்கமுடியாது. டூனிஸ் வெற்றிக்குப்பின் நேசநாடுகளின் நடவடிக்கையைப் பற்றி நாம் ஒன்றும் சொல்லமுடியாது. ஆகிலும் வரப்போகும் சில வாரங்களில் துருக்கி தன்னுடைய நடவடிக்கைகளை மாற்றிக்கொள்ளாதென்று நான் நினைக்கிறேன். துருக்கிக்கு சமீபத்திலுள்ள நாடுகளின் நடவடிக்கையை ஒட்டி துருக்கியின் நடவடிக்கைகள் மாறுதல் அடையும். துருக்கி இப்பொழுது யுத்தத்துக்குத் தயாராகயிருக்கிறதென்பது நிச்சயம். ஒரு நாளைக்கு துருக்கி மூவகைப்பட்ட படைகளை விஸ்தரிப்பதில் 2 மிலியன் பவுன்கள் செலவிடுகிறது. துருக்கியைத் தாக்குமுன் போரிஸ் மன்னர் இந்தச் செலவு திட்டத்தை கவனித்துப் பார்க்கவேண்டும். அகஸ்மாத்தாக அவன் தப்பான முடிவுக்கு வந்து துருக்கியைத் தாக்கினால், துருக்கி அவனை எதிர்த்து நிற்கத் தயாராகயிருக்கும். எதிர்பார்ப்பதற்கு முன்னதாகவே யுத்தம் முடிவடைவதற்கு துருக்கிக் காரணமாக இருக்கும்படியாகவும் நேரிடலாம்.

---

## சிவப்பு என்றால் அழகானது என்று பொருள்.

---

செம்படை என்பதில் "சிவப்பு" என்ற பதம், ராஜீயப் புரட்சிக்காரர்களின் நடவடிக்கையைக் குறிப்பிடுகிறதென்று நான் எண்ணம் கொண்டிருந்தேன். இது தவறென்று புலப்படுகிறது. ருஷ்யாவில் பத்திரிகை நிருபராக வெகுகாலமாக இருந்து அனுபவம் பெற்ற வால்டர் ரோண்டி என்பவர் கிராம்லினும் ஜனங்களும் என்ற புஸ்தகத்தில் இந்த விஷயத்தைத் தெளிவு படுத்தியிருக்கிறார்.

இந்த வார்த்தையை ருஷ்ய பாஷையில் கிராஸ்னி என்று சொல்லுகிறார்கள். இதற்கும் மூல தாது கிராஸிவி, அழகான, என்ற பதம் தான். சிவப்பு என்பது மனித வாழ்க்கையினுடையவும், சூர்யனுடையவும், வர்ணத்தையும், பனிக்கட்டி உறைந்த ருஷ்யச் சமவெளிகளில் ரத்தத்தின் உஷ்ணத்தையும் குறிப்பிடுகிறது. வெள்ளையென்பது சாவையும், அழுகையையும் உரைந்த பனியையும் அடையாளம் காட்டுகிறது. ஆகையால்தான் துருப்புகளை செம்படை என்றும் அதாவது சிறந்த தீரமுள்ள படை என்று பொருள்படும்படியாக, ருஷ்யர்கள் அழைக்கிறார்கள்.

1941-ம் வருஷம் இந்த அபிப்பிராயத்தை வெளியிட்டபின் செம்படை அதிகமான கியாதி பெற்றுவிட்டது. செம்படையென்னும் பதங்களில் சிவப்பு என்ற பெயரெச்சத்தின் அர்த்த விவரணத்துக்குப்பின் அதிக பயங்காளிகளும் செம்படையின் தீரத்தைப் பாராட்டாமலிருக்க முடியாது.

சுருங்கச் சொன்னால் சிவப்புக்கும் புரட்சிக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. கிரிமியாவில் பிரிடிஷ் துருப்புகளுக்காக பத்திரிகைக்காரர் ஒருவர் எழுதிய "லேசான சிவப்புக் கோடும் அதன் உச்சியில் எஃகுக் கூறும்" என்ற தொடர் மொழியிலுள்ள விஷமம் சிவப்பு என்பதில் இல்லை.

---

## லாடங்கள்.

### மதராஸ் பிரஸ் கம்யூனிக்குக்.

(ஜூன் 23, 1943).

பள்ளிச் சிறுவர்களாலும், சாரணர்களாலும் மதராஸ் ராஜதானியிலுள்ள ரஸ்தாக்களில் உள்ள லாடங்களைச் சேகரித்து கொடுப்பதற்கென அரசாங்கத்தாரால் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட விஷயம் முற்றிலும் வெற்றியோடு நடைபெறவில்லை என்றும், அவ்வாறு பொருக்கப்பட்ட லாடங்கள் முழு லாடங்களாக இல்லாவிட்டால் 6 லாடங்களுக்கு ஒரு அணு வீதம் பரிசளிப்பதில் சிரமம் ஏற்படுகிறது என்றும் ஒரு பத்திரிகையில் நிருபர் ஒருவர் எழுதியிருந்த விஷயத்தின்மேல் அரசாங்க கவனம் சென்றது.

இக்குறிப்பு உண்மை விஷயங்களால் ஆதரிக்கப்படவில்லை. பிப்ரவரி மாதம் இந்த விஷயம் ஆரம்பித்த காலத்தில் சேகரிக்கப்பட்ட 25,055 லாடங்களும், மார்ச்சு மாதத்தில்

115,108 லாடங்களும், ஏப்ரல் மாதத்தில் 131,994 லாடங்களுக்கும் பரிசளிக்கப்பட்டது. ரோட் டிராபிக் போர்ட் காரியதரிசி ஆபீஸ்களின் கையிலுள்ள பணம் சிறிது காலத்திற்கு முன்பு இத்தகைய பரிசுகள் கொடுப்பதற்கென மும்மடங்காக்கப்பட்டது. இந்த விஷயம் ஆரம்பித்தவுடன், முழு லாடங்கள்தான் கொண்டுவந்து கொடுக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்த வேண்டியதில்லையென்றும், லாடங்களை இரண்டாக நறுக்கி, இரண்டு லாடங்கள் எனச் சொல்லி இரு மடங்கு பரிசு வாங்கமுடியாத வகையில் லாடங்கள் நறுக்கப் பட்டிருந்தாலும் சரி அவைகளுக்குப் பரிசு கொடுக்கவேண்டும் என்றும் அரசாங்கத்தில் உத்தரவு கொடுத்திருந்தனர். அதே விஷயத்தை அதன் சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர் சின்னுட்களுக்கு முன்கூட ஞாபகப்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

தேசீய யுத்த முன்னணி அங்கத்தினர்கள் இவ்விஷயத்தில் செலுத்திவரும் அக்கரையை நோக்க அரசாங்கத்தினர் மிகவும் மகிழ்ச்சியடைகிறார்கள்.

மோட்டார்கள் மிகவும் வேகமாக ஓடினாலல்லது லாடங்களினால் மோட்டார் டயர்களுக்கு சேதம் ஏற்படுவது அசாத்தியம் என்றும், மோட்டாரின் வேகம் 35 மைல்களில்தான் ஓட்ட வேண்டும் என்றும் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கின்றனர் என்றும் அதனால் டயர்கள் மீதப் படும் என்றும் மோட்டார் உள்ள மக்களை அரசாங்கத்தார் ஞாபகப்படுத்துகின்றனர்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 153. (6-வது பிரிவு).

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3- 7-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | | 7- 7-43 | அன்னவாசல் | ... மாலை 7.00 |
| 4- 7-43 | கீழாநிலை | ... ,, 7.00 | | ,, | கீழக்குறிச்சி | ... ,, 7.30 |
| ,, | கீழாநிலை-புதுப்பட்டி | ... ,, 7.30 | | 8- 7-43 | மலம்பட்டி | ... ,, 7.00 |
| 5- 7-43 | பெருமாநாடு | ... ,, 7.00 | | ,, | பேராம்பூர் | ... ,, 7.30 |
| ,, | புல்வயல் | ... ,, 7.30 | | 9- 7-43 | ஆலவயல் | ... ,, 7.00 |
| 6- 7-43 | சடயம்பட்டி | ... ,, 7.00 | | ,, | அம்மன்குரிச்சி | ... ,, 7.30 |
| ,, | ஒலியமங்கலம் | ... ,, 7.30 | | | | |

### பிரஸங்கம் 154. (1-வது பிரிவு.)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10- 7-43 | முனிஸிபல் ஆபீஸ் | ... மாலை 6.00 | | 14- 7-43 | பூங்குடி | ... மாலை 7.00 |
| 11- 7-43 | கீரனூர் | ... ,, 7.00 | | ,, | சத்யமங்கலம் | ... ,, 7.30 |
| ,, | நாஞ்சூர் | ... ,, 7.30 | | 15- 7-43 | மிரட்டுநிலை | ... ,, 7.00 |
| 12- 7-43 | பூவரசகுடி | ... ,, 7.00 | | ,, | அரிமளம் | ... ,, 7.30 |
| ,, | வேங்கடகுளம் | ... ,, 7.30 | | 16- 7-43 | உடையாளிப்பட்டி | ... ,, 7.00 |
| 13- 7-43 | பெருங்களூர் | ... ,, 7.00 | | ,, | கிள்ளுகோட்டை | ... ,, 7.30 |
| ,, | ஆதனக்கோட்டை | ... ,, 7.30 | | | | |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | | | |
|---|---|---|---|
| 3— 7—43 | வெட்டம்விடுதி. | 10— 7—43 | பொன்னமராவதி. |
| 4— 7—43 | கொடும்பாளூர். | 11— 7—43 | விராச்சிலை. |
| 5— 7—43 | விராலிமலை. | 12— 7—43 | அரிமளம். |
| 6— 7—43 | ராமச்சந்திரபுரம். | 13— 7—43 | குடுமியாமலை. |
| 7— 7—43 | கரம்பக்குடி. | 14— 7—43 | ராயவரம். |
| 8— 7—43 | குழிபிரை. | 15— 7—43 | ஆலங்குடி. |
| 9— 7—43 | புதுக்கோட்டை. | 16— 7—43 | புதுக்கோட்டை. |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,000—7-7-43.